
# சிவவாசகம்

சிவமந்திரம்



கைலாயமலை

# சிவகோவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T|200|0666

# சிவமந்திரம்

# சிவவாசகம்

# சிவகோவை

பாடி அருளியவர் :
சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஒம்ஷர்

MOUNASHRAM
No. 19, I. B. C. ROAD, WELLAWATTA,
COLOMBO-6, SHRI LANKA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சிவம்

# பொருளடக்கம்


அ. முன்னுரை

ஆ. எழிற்சி 01

இ. சிவவாசகம்

1. சிவவாழ்த்து 03
2. சிவபோற்றி 06
3. சிவகுரு வருகை 10
4. சிவகுரு மகிமை 12
5. சிவகுரு காட்சி 14
6. சிவஞான விழிப்பு 16
7. சிவஞானச் செல்வம் 18
8. சிவகுரு சரணம் 21
9. சிவஞானக் கேள்வி 24
10. சிவமாதல் 29

ஈ. சிவகோவையார் 32

உ. சிவமந்திரம்

I இறைநுதி — முதுநிலை 47

சிவநிலை 48

நிர்விகல்பசமாதி 52

II போதனை — வெளிப்பாடு 53

புலப்பாடு குருவிழி 56

வினைநிலை 57

வழியாகுதல் 58

III பொதுமை — 63

ஆளுமை 70

பிறப்பு 72

அன்பு 73

எழுத்து 74

IV வேதநிலை 78

விசாரம் 82

சமம், சமாதானம் தமம் 83

உபரதி திதிட்சை 84

சிரத்தை 85

சிரவணம், மனனம், பிரசங்கியானம் 86

V சித்தநிலை 93


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# (அ) இது முன் உரை

'இது' முன்னதாக உரைக்கப்பட்டதாலும்
'இது' முன்னரே 'அது'வின் உரையானதாலும்
'இது' 'அது' ஆகி உரையாகி, வாசகமாகிக்
கோவையாகி
மந்திரமானது.

இந்நூல் சிவமந்திரம், சிவவாசகம், சிவகோவை என்பனவற்றை உள்ளாக்கியது. சாட்சாத் சொரூபமாகிப் பார்பதி சமேதராய் உள்ள பரமேஸ்வரர் மீது - பரம்பொருள் மீது பாடப்பெற்றது.

ஞானிகளின் ஞான குருவாகிய தெட்சணா மூர்த்தியின் பாதார விந்தங்களில் அர்ச்சிக்கப்படும் மலர்களில் இதுவும் ஒன்று.

பாரதமாதா பெற்றெடுத்த ஆத்மார்த்த ஞானி, காஞ்சி முனிவர், மௌனகுரு, ஜகத்குரு, சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகளின் அருட்கடாட்சமும், வாழ்த்தும், ஆசியும் பெற்று வெளிவருகின்றது இந்நூல்.

ஓம் திருமூலேஸ்வராய நமக ஓம்

**சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்**
மௌனாச்சிரம்,
வெள்ளவத்தை,
கொழும்பு,
இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# (இ) எழிற்சி

1. பூவினம் மலர்ந்தன புள்ளினம் மறைவிட மகன்றன
புதுமலர்ப் பூம்தளிர்களும் புகுந்தன புகுந்தனவே!
ஆவினம் அழுதன ஆனினம் அருமறை ஒதியேஓதி
ஆதியின் ஜோதியும் அலர்ந்தது அலர்ந்ததுவே!
தாயினம் தொடர்ந்தன தண்ணொளி தர்சனம்
தெரிந்தன
தடைகளும் தவிர்ந்தன தவிர்ந்தன தாம்
பாவினம் சொரிந்தன பாவி நம் படைகளும்
பறந்தனவே!
பரமே! உமாசங் கரனார் 'சிவவாசக' மோத
எழுகின்றாயே!

2. நாநிலம் நடந்தது நள்ளிருள் நடந்தது நடந்ததுவே!
நந்தவ னங்களும் எழுந்தன விழித்தனவே!
நால்வகை மறைகளும் நிதியமாய் ஒலித்தன
ஒலித்தனவே!
நதிகளும் பொதியொடு ஊர்ந்தன ஊர்ந்தனவே!
நாதியர் கூட்டமும் நாட்டியம் ஆடின ஆடினகாண்
நங்கையர் நல்கியே நகர்ந்தனர் நகர்ந்தனதாம்.
நாதமும் வேதமும் நிகரதாய் வெளித்தன
வெளித்தனவே!
நதமே உமா சங் கரனார் 'சிவகோவையா' ரோத
எழுகின்றாயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மாநிலம் விழித்தது மதியினம் வெளுத்தது

வெளித்ததுவே!

மங்கை நல்லாளவள் மலர்கொடு நடந்தனளே!

தாயிலம் தளிர்ந்தது தனியினம் நடந்தது நடந்ததுவே!

தாமரை மலர்களும் விரிந்தன விரிந்தனவே!

சேயிலம் செழித்தது சோதியின் சேய்தியும் பிறந்ததுவே!

சோர்விலும் வேதியன்

அழைத்தன னழைத்தனனே!

அவிலும் உவிலும் இயிலும் மவிலும் எயிலும்

ஓமேஉமாசங் கரனார் 'சிவ மந்திர' மோத

எழுகின்றாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) **சிவவாசகம்**

## 1. சிவ வாழ்த்து

சிவவாசகம் சிந்தி சிலவாசகம் வந்து
சிவபாவனை தந்த சிவகழல் வாழ்க.
சிவனார் புகுந்து சிந்தை இருந்து
சிவபதம் பதித்த சிவகழல் வாழ்க.
சிவஓம் சிவஓம் சிவசிவ ஓமெனச்
சிற்றம் பலவன் சிவவா சகமாய்ச்
சிற்றம் பலமுட் பேரம் பலவன்
சிவனார் சீவ சிவகழல் வாழ்க.
உடலது திருத்தி உணவமு தளித்து
உறவினை வளர்க்கும் சிவகழல் வாழ்க.
உலகது காட்டி உணர்வது ஊட்டி
உயிரினு ளுறையும் சிவகழல் வாழ்க.
அன்பில் அணைந்து ஆதர வளித்து
அன்பாய் இருக்கும் அவன்கழல் வாழ்க.
ஆரமுதாகி அருள் வீறளித் தென்
அவனி வந்த அவன் கழல் வாழ்க.
இன்பமே சூழ இருளே அகல
இளையோன் இனிய கழலே வாழ்க.
இருக்கு நால்வே தன்இக பரனென்
இருப்பிடத் திருக்கும் இணையடி வாழ்க.
மலர்தலை உலகில் மலவிருள் நீக்கி
மனதுளே மலரும் சிவகழல் வாழ்க.
மாசறு காட்சி மாண்பென மகிழ
மான்மழு ஏந்திய மறைகழல் வாழ்க.
ஆலயம் அமைத்து ஆணவ மறுத்து
ஆலய மாகிய அவன்கழல் வாழ்க.
ஆல்கீழ் இருந்து அறவுரை யளித்து
ஆகமம் அளந்த அவன்கழல் வாழ்க.
பிராம்மண னாகிப் பிரம்மநூற் புனைந்த
பிரம்மோ பதேசன் புரிகழல் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிலுதி யென்று பட்சணம் தந்து
பாகுந் தந்த பரசிவன் வாழ்க.
பாதை பதைத்த பாவியைப் பணித்து
பாவனை பழக்கும் பரசிவன் வாழ்க.
பண்பு பகர்ந்து 'டர'தேசி யாக்கிப்
பானமு தளிக்கும் பரசிவன் வாழ்க
பயமும் நீங்கப் பரிவும் நல்கிப்
பாதம் பதிக்கும் பரசிவன் வாழ்க.
பண்ணிய பாவம் புண்ணியம் கடக்கப்
பாசம தழிக்கும் பரசிவன் வாழ்க.
பங்கயத் தமரப் பங்கெனக் களித்த
பங்கய மாமப் பரசிவன் வாழ்க.
பதியுரை கூறிப் பதியது வாகிப்
பதியது உணர்த்தும் பரசிவன் வாழ்க.
போதனை யளித்தும் போதக மளித்தும்
பேதமை யழிக்கும் பரசிவன் வாழ்க.
புத்திய தெழுப்பிப் புகலிட மறைந்து
புன்னகை சூடும் பெரும் கழல் வாழ்க
சாந்த மதாகிச் சாத்திர மகலச்
சாதனை காட்டும் சதாசிவன் வாழ்க.
சத்தமு மாகிச் சத்திய மாகும்
சத்சித் ஆனந்த சிவ கழல் வாழ்க.
சங்கைய தாகிச் சங்காரம் பண்ணும்
சங்கர ரான சதாசிவன் வாழ்க.
சலிப்பது நீக்கிச் சகமது வாகும்
சங்கர ரான சதாசிவன் வாழ்க.
மௌனி யதாக மௌன முணர்த்தி
மனவழி நீக்கும் மோனம் காட்டி
மௌன மொழியால் மனைய தமைத்து
மௌன சமாதி மனையில் மனைந்து
மண்ணில் மலர்ந்து மண் ஒடெடுத்து
மாண்பது வாகும் மௌன ஞான
தட்சணா மூர்த்த சிவகழல் வாழ்க.
இருபிறப் பகற்றி வருபிறப் பிழித்து
வந்தனம் வளர்த்து வள்ளலு மாக்கி
வகை வகையாக வரமும் வழங்கி
வீரமும் கூட்டி வீணரை விலக்கி
வல்லமை வரைந்து வாகை சூட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கும் ஆடி விளக்கமும் தந்து
வினையினைப் போக்கி விதிதனை விடுத்து
விளக்கது வாகும் விமலோன் வாழ்க.
விந்தைகள் நீக்கி வீரியம் ஊட்டி
விரதம் காட்டும் விமலோன் வாழ்க.
வாதம் பண்ணி வாசம் செய்து
வாகன மாகி வாகன மாக்கி
வானமு தூட்டி வளிவழி வந்து
வாவென அழைக்கும் விமலோன் வாழ்க.
யாசகம் கேட்டு யாசக னாக்கி
யாத்திரை செய்ய யானே யாகி
யசுரும் ஓதி யமனை ஓட்டி
யாழே யாகும் சிவனே வாழ்க
என்னை யாக்கி என்னை யணைத்து
என்னை யழித்து என்னை யருளி
என்னை மறைக்கும் எங்கள் பெருமான்;
எங்கோ னாகி ஏகனு மாகும்
எழுதா மறையின் சிவகழல் வாழ்க.
ஏதும் அறியா திருந்த என்னை
ஏற்றி எடுத்து ஏடும் எழுதி
ஏழ்கடல் நீக்கும் எங்கள் பெருமான்;
என்னவ னாகி என்னுட் புகுந்து
என்னை யுருக்கி ஏகமு மாகி
ஏகி நிற்கும் சிவகழல் வாழ்க.
எங்கும் நிறைந்து எச்ச மின்றி
என்தன் நிலையை எழுத எழுதி
என்நிழல் நீக்கி என்னைக் காட்டும்
எங்கள் பெருமான் சிவகழல் வாழ்க.
எங்கள் தலைவன் எங்கள் எசமான்
எங்கும் ஆடும் ஏக நாயகன்
எங்கள் கூத்தன் எங்கள் நாதன்;
ஏக நாதம் இசைக்க **வேதம்**
ஏக காலம் முழங்கச் **சப்த்தம்**
ஏக உறையிற் பிறக்க **பிந்து**
ஏக வகையிற் சிறக்க **கலைகள்**
ஏக மாகி முழங்கித் **தத்வம்**
ஏக தொனியில் தொனிக்க **மந்த்ரம்**
ஏக நாயக **புவனா** பதியை
ஏகி ஏத்தப் பணிந்து நாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2 சிவ போற்றி

சித்தம் சிதைத்துச் சிவமயமாகிய சிவனே போற்றி
சித்தும் கடந்து சித்தனுமாகிய சிவனே போற்றி
சிறுமை நீங்கச் சிறுவனுமாகிய சிவனே போற்றி
சிலம்பொலி சிந்திச் சீராய் ஆடும் சிவனே போற்றி
சிக்கெனப் பிடித்துச் சின்மயனாகிய சிவனே போற்றி
சிரிப்பது செய்து சீவனுமாகிய சிவனே போற்றி
ஆறச் சொல்லி அருளவனான சிவ சிவ போற்றி
அண்டம் அடக்கும் ஆற்றலுமான சிவ சிவ போற்றி
ஆசை அழிக்கும் அப்பனுமான சிவ சிவ போற்றி
அன்பு அளிக்கும் அம்மையுமான சிவ சிவ போற்றி
அறிஞா போற்றி அழகா போற்றி
அருளா போற்றி ஐயா போற்று
அம்பா போற்றி ஆதி போற்றி
அந்தம் போற்றி அருட்சிவ ஜோதி
அனந்தா போற்றி ஆக்கி அணைத்து
அழித்து அருளி மறைத்து மறையும்
அனலே போற்றி கனலே போற்றி
புனலே போற்றி அளியே போற்றி
புவனா பதியின் புவியே போற்றி
வெளியே போற்றி ஒளியே போற்றி
கங்கை யனாகிய சலமே போற்றி
வளியது வாகிய வானே போற்றி,
விண்ணும் மண்ணும் விளங்கத் தந்து
கண்ணைத் திறந்த கழலே போற்றி,
காமம் தந்து காமன் கடையக்
காலம் கடந்த கழலே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை எழுந்து காதை அடைத்துக்
காலை எழுப்பிக் காதம் இழுத்து
நாதம் ஒலித்து நாளும் இசைந்து
நாமம் தந்த நாதா போற்றி.
பட்டம் பதவி பாசம் பிசைந்து
பத்தும் பறக்கப் பசியும் தணித்துப்
பாலம் அமைத்த பாதம் போற்றி.
கேடும் களைந்து கோபம் குலையக்
கோவண மளித்த கோனே போற்றி.
கோப, தாப மோகம் இழந்து
கோசம் நீங்கக் கோயில் சமைத்துக்
கோகழி யாகிய கோனே போற்றி.
இரங்கிய என்னை ஏங்க விடாது
தாங்கி நின்று தவமும் தந்து
தத்துவ மாகிய தலைவ போற்றி.
பண்ண திசையப் பணிவிடை செய்து
பண்பு மாகிய பரமா போற்றி.
பத்தியம் காக்கப் பத்திய மான
பாலும் நெய்யும் பருக வைத்துப்
பழவகை தந்த பரமா போற்றி.
ஞானப்படுக்கை விரிபசு வேறி
ஞானம் வீசும் ஞானா போற்றி.
சும்மா இருத்திச் சுகமும் சுகிக்கக்
சுவாமி யான சூத்திரம் சொல்லிச்
'சுகர்' போலாகும் சூதும் செய்து
'சுவேதன' சாத்திரம் சொல்லி வைத்துச்
'சங்கர' சத்தியம் சாத்து வித்துச்
சாம வேத கானம் பொழிந்து
சால இருக்கும் சதாசிவ போற்றி
முனிவர் தேவர் முன்னே மொழிய
மனிதர் மாதர் பின்னே வழியப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதர் கணமும் சூழ்ந்து பொலியப்
பூசகர் பூசனை புனைய வாழ்த்தப்
புத்தமர் தத்துவர் புத்திய தேத்தப்
புவனா பதியன் புலர்ந்து வருக.
கள்ளன் வந்து கழல்கள் காட்டிக்
காவல் என்று காதல் பண்ணிக்
கானம் என்று காமம் செய்து
காலா கால விஷமும் தந்து
காதைப் பிடித்துக் கண்ணைத் திருப்பிக்
கப்பல் காட்டிக் கப்பம் கேட்டுக்
கலைய தென்று கந்தை பண்ணிக்
கனவ தென்று கார் களைந்து
நனவ தென்று நான் நகர்ந்தே
உறக்க மென்று ஊடி நின்று
விழிப்ப தென்று வீழும் என்னைத்
துரிய மாக்கிய தலைவ போற்றி.
சத்த மின்றி நித்தம் வந்து
சக்தி யோடு பித்து மாக்கிச்
சுத்த மான சுனையு மாகிச்
சுற்ற மான சிவனே போற்றி;
வள்ள லென்று வம்பு பண்ணி
வெள்ள மென்று வீம்பு செய்து
குள்ள மென்று கொடி பிடித்துக்
கிழம தென்று குமர ராகிக்
கோவு மான கோனே போற்றி.
கோலம் செய்து கோதும் போக்கிக்
கோரம் நீங்கக் கோவு காட்டிக்
காவு செய்து கோள மாகிக்
கோவு மான கோனே போற்றி.
லயம தாகி லிங்க மாகி
வலிய தாகி வலிய வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைய நின்று வாசம் பண்ணும்
வாம மான தேவா போற்றி.
சில்லு மாகிச் சின்ன தாகிச்
செல்லும் வான சேய்தி யாகிப்
பல்ல தாகிப் புல்லு மாகி
வெல்ல வல்ல விசர னாக்கி
ஒல்ல வல்ல ஓத மாகி
ஓத வல்ல ஓமு மாகி
ஓது கின்ற ஓமே போற்றி.
போற்றி நாளும் சிவனே போற்றி
போற்றி நானும் சிவனே போற்றி
போற்றி நாதம் சிவமே போற்றி
போற்றி வேதத் தலைவா போற்றி
போற்றி கீதக் குமரா போற்றி
கருணை போற்றி கணையே போற்றி
காமன் போற்றி காதல் போற்றி
காலன் போற்றி கழலே போற்றி
கோவே போற்றி கோனே போற்றி
குருவே போற்றி குழந்தாய் போற்றி
நிரா காரம் ரூபா போற்றி
போற்றி போற்றி சிவசிவ போற்றி
போற்றி போற்றி வசிசிவ போற்றி
போற்றி போற்றி சயசிவ போற்றி
போற்றி போற்றி சயவசி போற்றி
போற்றி போற்றி சயசய போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3 சிவகுரு வருகை

1: கருவிலே யிருந்து வந்து களங்க மற்றுப் போனது
உருவிலே யிருந்து வந்து உருவு மற்றுப் போனது
தெருவிலே திரிந்த போது தேசமறப் போகு மந்த
பொதுவிலே பெரிய தான மௌன மான குருவது

2. பேதமை நீக்க வந்து சாதனை செய்து நின்று
பேதமை நீக்கி விட்டுப் போகமு மூட்டி விட்டுப்
பாதகப் படையை நீக்கிப் பார்வையும் பார்த்து விட்டுப்
பாதையும் படைத்த அந்த மௌன மான குருவது

3. காத லென்று சொல்லியே கூதல் கொண்டு நின்றது
காவ லென்று சொல்லியே சாதல் செய்து விட்டது
ஆத லென்று அலறியே அழிவு செய்து நின்றது
காத லாதல் கருதியே மௌன மாகும் குருவது

4. அன்பிலே பிறந் திருந்து அன்பிலே வளர்ந்து வந்து
அன்பதாய் மலர்ந்திருக்கு மன்ப தான வப்பொருள்
அன்பதா மென்று வோதி யன்ப தாகியாகி நின்று
அன்பதா யிருக்கு மந்த மௌன மான குருவது.

5. அன்பு வன்பு வென்றுசொல்லி யழகினைக் காட்டி நின்று
அன்பு வன்பு வென்றுவைது யறிவினை யூட்டி விட்டு
அன்பு வன்பு வென்றுபேசி யறிஞனு மாகி நின்று
அன்பதா யிருக்கு மந்த மௌன மான குருவது.

6. அன்பதாய் மலர்ந் திருந்து ஆரணங்கு மாகி நின்று
அன்பதாய்ப் பரந் திருந்து அப்பனங்கு மாகி வந்து
அன்பதாய்ச் சிறந் திருந்து அம்மையாகி யாகி நின்று
அன்பதா யிருக்கு மந்த மௌன மான குருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தந்தையாய்த் தாயாய்த் தாரமாய்த் தனயராய்
விந்தையாய் விமலராய் விளம்பிடா விளக்குமாய்
முந்தையாய் முனிவராய் முன்னிருக்கு மௌனியாய்.
சிந்தையாம் சீவனான மௌனமான குருவது.

8. கருணை யென்ற கணையெடுத்துக் கருவை நாடிச்
சென்றதால்
கருணை யென்ற பிணைகொடுத்துத் 'திரு' வை யேற்றி
வைத்தது
கருணை யான அணைகொடுத்து உருவை மாற்றி
வைத்தது
கருணை யான வடிவமான மௌன மான குருவது.

9. கருணையே அன்ப தென்று கழலை நாடிக் கனியவே
கருணையே மருந்த தென்று கவலை போக்கி வைத்தது
கருணையே சுகந்த மென்று காட்சி காட்டி நின்றது
கருணை யான வடிவமான மௌன மான குருவது

10. கருணையே அருள தென்று கொம்பு விட்டகன்றதால்
கருணையே காவ லென்று கார் குழல் கழன்றது
கருணையே கவின தென்று கம்பு கட்டி நின்றது
கருணை யான வடிவமான மௌன மான குருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 சிவகுரு மகிமை

1. ஆதி சக்தி யானவன் ஆதி சத்த மானவன்
பாதி பாத மானவன் பர மனோடு வானவன்
போத மோதி யானவன் பேத போதி யானவன்
பாதமே தொழு பவர்க்குப் பாக மான மகிமையாம்

2. காலனை நினைத்த போது காம னாகி வருபவன்
பாலனை எடுத்த போது பாலு மான பகலவன்
சிவனை யுணர்ந்த போது சீல மாயி ருந்தனன்
தான தாகியான போது தரணி யான மகிமையாம்

3. யாத்திரை நடந்த போது யாத்திரை ஆபவன்
பாத்திரம் பிறந்த போது பக்குவம் ஆபவன்
சாத்திரம் அகன்ற போது சாதகன் ஆபவன்
கோத்திரம் கழன்ற போது கொலுவதான மகிமையாம்.

4. அம்பலம் ஆனவன் அப்பரம் ஆனவன்
அம்பதாய் வந்துவந்து அமுதமே யானவன்
அஞ்சிலே யென்றுகூறி அஞ்சனம் ஆனவன்
அஞ்ஞானி அஞ்ஞானம் அஞ்சாத மகிமையாம்

5. ஆடையி லணைந்த போது அழகதாய் இருப்பவன்
ஓடையி லிருந்த போது ஓமமாய் எழுந்தனன்
கோடையில் நடந்த போது கொடியதே பிடித்தனன்
பீடையே யகன்ற போது பிரமனான மகிமையாம்

6. தேடித் திரிந்த போது தென் படா திருந்தவன்
தேடா திருந்த போது தெப்ப மாகி நின்றனன்
வாடி யிருந்த போது வம்பு வீசி நின்றனன்
வாடா திருந்த போது வீர மான மகிமையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. இன்பமில்லைத் துன்பமில்லை இருநிலையும் கடக்கவே
அழிவுமில்லை ஒளியுமில்லை வெளியுமில்லை யானதே
இழிவுமில்லை உயர்வுமில்லை இகபரங்க ளில்லையே
இழவிழந்த மௌனமான மொழியதான மகிமையாம்.

8. காலையில்லை மாலையில்லைக் கலையுமில்லை
மனையுமில்லைக்
காலமில்லைக் கானமில்லைக் காததூர
மொன்றுமில்லைப்
பாலுமில்லைப் பாலமில்லைப் பாகுமில்லைப்
பாதையில்லைப்
பங்கயத் திருந்துவந்து பாதமான மகிமையாம்.

9. மருத்துவர் ஆனபோது மருந்ததை மறைத்தனன்
மருந்ததை மறந்தபோது மருந்தகம் மாற்றினன்
மருத்துவர் ஆனவந்த மருந்ததும் ஆனவன்
மருத்துவர் மருத்துவம் மகத்ததான மகிமையாம்.

10. ஓவியர் ஆகியே ஓவியம் ஒருத்தனன்
பாவையர் நீக்கியே பாவனை பரந்தனன்
பாதையர் வந்துவந்து கூடவும் கூடினன்
ஓதியிர் ஓதியிர் ஓமதான மகிமையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 சிவகுரு காட்சி

1. தேசமெல்லாம் தேடித் தேங்குது காண்
தேசமெல்லாம் தேவர் தேனது காண்
தேவனெல்லாம் தேகம் தேடுது காண்
தேவரெல்லாம் தேடும் தேகமான காட்சியே.

2. எங்கெலாம் ஏங்கும் ஏற்றம் காண்
இங்கெல்லாம் இலங்கும் இருப்பு காண்
சங்கெல்லாம் ஊதுப் சங்கம் காண்
எங்கெல்லாம் ஏகும் ஏகமான காட்சியே.

3. ஏமாற்ற மேது காண் ஏமாப்பு மேது காண்
ஏன்மாற்ற மில்லை காண் ஏனாக்க முண்டு காண்
ஏகமாமெ ழுந்து காண் எம்பரம் தொழுது காண்
ஏகமாகி யேகி யாகும் ஏகமான காட்சியே.

4. நாடகர் நாடகம் காண் நயமது நவிலுது காண்
நாயகர் நாதனைக் காண் நதமது நகலுது காண்
நாயகர் நூலினைக் காண் நாதமே நுகருது காண்
நாதனார் நடுவு நின்ற நம்ப னான காட்சியே.

5. இயலது இருப்பு காண் இளமது இனிமை காண்
மயலது மறையு காண் மறையது மாண்பு காண்
மதமது முறுவு காண் மனமது மடமை காண்
மனதினர் மதிய தாகும் மாது வான காட்சியே.

6. செல்வம் சேய்மை செல்லும் சப்த்தம் காண்
சித்தம் சீர்மை சிதையும் சீலம் காண்
சப்த்தம் சத்தியம் சாது சங்கம் காண்
'சத்'தும் 'சித்'தும் சங்கம மான காட்சியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. தத்தித் தவழ்ந்து தெத்தித் தெழும்பும் தத்துவம்
தித்தித் துவழ்ந்து திக்குத் திரிந்தும் திருமலை
தத்தித் தமிழ்ந்து தொத்தித் திணையும் தலைவன்
'தத்' தத் துவனார் தலைமே லேகும் காட்சியே.

8. கானத் திருந்து காண் காணும் துடிப்பு காண்
காமக் களவு காண் காவல் புரியக் காண்
காதற் கனிவு காண் காலம் கலையக் காண்
காமேசர் காவ லாகிக் கண்க ளான காட்சியே.

9. கள்ளன் கிளர்ந்து கண்ணும் கசக்கிக் கந்தைய
தாகியதால்
கள்ளம் குழப்பிக் கொம்பும் குறுக்கிக் கோவண
மாகியதால்
கள்ளர் களன்று காதம் கடந்து கானக மேகியதால்
கள்ளும் கனிந்து கண்ணுட் கலந்த காட்சி காட்சியே.

10. தாயைத் தாங்கிய தாரம் தெரிந்து தந்தை
யுணர்ந்தமையால்
தாயைத் தாக்கிய தாகம் துயில்த்துத் தந்தை
யறிந்தமையால்
தாயைத் தேக்கிய தேகம் திருத்தி தந்தை
யடைந்தமையால்
தாய்தம தாகியே தன்மய னாகிய காட்சி காட்சியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 சிவஞான விழிப்பு

1. அகமுக மாகிய அமரேசா அருள்
அகமது வாகிய அழகேசா அனல்
அகபர மாகிய அமுதோனே அழல்
அகமக மாகிய அருளோனே விழி.

2. உடலிட மாகிய உமையாளா உயிர்
உறவிட மாகிய உலகீசா உணர்
உறைவிட மாகியுள் உறைவோனே என்
உயிரினு ளாகிய உயிரோனே விழி.

3. மனமக மாகிய மறையோனே மலர்
மறைவிட மாகிய மதிசூடி மன
மதுவது வாகிய மணவாளா மன
மதமது மேவிய மாதீசா விழி.

4. இகபர மேவிய இமைவாசா உள்
இடமிட மாகிய இளையோனே உன்
இயலிசை யாகிய இசையோனே இல்
இருவரு மாகிய இடபாகா விழி.

5. எழுதுவ தாகிய ஏகாந்தா என்
எருமல நீக்கிய எம்பெருமான் என்
எதுவது வாகிய ஏகோனே உன்
ஏடது ஓதிய எம்மீசா விழி.

6. விழஎழ வினவிய விமலோனே உயிர்
அழ அழ ஆடிய அதிபதியே என்
முழுவிள மாகிய முனியோனே நற்
கழலது வாகிய பதியோனே விழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கனலென அனலென அமர்வோனே என்
கனவென நனவென நகரானே அப்
புனலெனப் புவியெனப் புனைசூடி நான்
தனதென தனவென ஆடுவனே விழி.

8. வெளியென வளியது வகையாகி வான்
வழியென வழியது வகைகூறித் தான்
ஒளியென ஒழிவன நிலைகூறும் உன்
ஒரு நிலை ஒரு பொருள் ஓங்காரா விழி.

9. மொழியது மொழிவது மோனத்தே தன்
மழலையை மனதினுள் மலராகத் தன்
கழலிணை கருதினில் கனியாகும் என்
கழிகோ காட்டிய கோமானே விழி.

10. மணியென மடமென மதிநீங்க அத்
துணியெனத் துணிபெனத் தொனி கூறி
அணியென அணையென அறமோதித் தன்
அணியது அணையது ஆகமனே விழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 சிவஞானச் செல்வம்

1. உள்ள தோர் உணவு தந்து
உளமது உழவு காட்டி
உள்ள வோர் ஊஞ்சல் தந்து
உறவது உணர்வு காட்டி
உய்ய வோர் உறவு தந்து
உன்னத உண்மை காட்டி
உவகை யோர் உயிர்ப்பு தந்த
உயிர்க் கழற் செல்வம் தானே.

2. நிற்க வோர் நியமம் தந்து
நியதியும் நின்று காட்டி
நிதிய தோர் நிதியும் தந்து
நிமலனார் நிழலும் காட்டி
நிலைய தோர் நிகழ்வும் ஆகி
நிர்விக நீதி காட்டி
நிலையிலா நீத்தந்தன்னைச் சடையிலே
திற்பித்ததெம் செல்வம் தானே.

3. நல்ல தோர் இருக்கை தந்து
நாநிலத் திருப்பு காட்டிச்
சொல்ல வோர் சொல்லும் சொல்லிச்
சொக்கரின் சொருபு காட்டிச்
செல்ல வோர் சேய்தி சொல்லிச்
செம்பொருட் செய்கை காட்டிச்
செம்மை யாம் சோதி காட்டும்
செங் கழற் செல்வம் தானே.

4. வழிய தோர் வளியில் ஏற்றி
வனநிலை காட்டி நின்று
வளம தோர் வனப்பு தந்து
வலஇடம் ஆகி நின்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகைய தோர் வாகை சூட்டி
வதனமும் காட்டி நின்று
வம்ப தோர் வம்பு பண்ணும்
வளர் மதிச் செல்வம் தானே.

5 பலவ தோர் பலமும் தந்து
பலநிலை நின்று காட்டிப்
புதிய தோர் பூசை தந்து
புலவரின் புதுமை ஊட்டிப்
பாவி யேன் பாவும் பாடப்
பாவினின் பண்பு காட்டிப்
பாவை யோர் பாதம் பரவும்
பசு பதிச் செல்வம் தானே.

6. தாரக மோர் தாரணை தந்து
தாகமும் தணியக் காட்டி
தாயக மோர் தாய்மை தந்து
தயவதும் தளிரக் காட்டி
தத்துவமோர் தரணி வந்து
தாட் சண்யமாகக் காட்டி
தாமரை ஓர் ஆயிரமா யென்
தலைமே லேவிய செல்வம் தானே.

7. திடம தோர் தியானம் தந்து
திண்ணையில் நின்று காட்டித்
திலக மாம் தீயும் தீட்டித்
தில்லையின் திருவும் காட்டித்
திசைய தோர் திக்க தெல்லாம்
திருவடி திகழக் காட்டித்
தினம தோர் திகைப்பு காட்டும்
திரு நடச் செல்வம் தானே.

8. சார மாய்ச் சமாதி கூடச்
சாத்விகம் காட்டி நின்று
சால தாய்ச் சாது செய்யும்
சாதனை சாதம் காட்டிச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீல மாய் வந்து என்னுள்
சீவியம் சிந்தி நின்று
கோல மா மலையில் நிற்கும்
சிவ கழற் செல்வம் தானே.

9. பாட வோர் பாவும் தந்து
பாவல னாகி நின்று
பூச வோர் நீறும் தந்து
புரவியி லேறி நின்று
புனைய வோர் மாலை சூட்டிப்
புவிதனைச் சூழ வந்து
புதிய தோர் பாதை காட்டும்
பசு பதிச் செல்வம் தானே.

10. உவகை யோர் உருவு மாகி
உதயமு மாகி நின்று
உரைய தோர் உணர்வு மாகி
உனதென தாகி நின்று
உலக தோர் உறவு மாகி
உறைவிட மாகி நின்று
உணர்வ தோர் உணர்வு மாகும்
உயிர்ச் சிவ செல்வம் தானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8 சிவகுரு சரணம்

### ( ஓங்காரப் பொருள் )

1. உணர்விலே உருவமாகி உள்உளே
உலக மான உமையே!
உணர்விலே உணவுமாகி உளமதில்
உறையு கின்ற உலகமே!
உணர்வினால் உணருகின்ற **உகாரமே!**
உலவு கின்ற உயிரே!
உணர்த்துமென் உண்மையே! உவப்பிலா
தூறுகின்றாய் சரணம் சரணம்.

2. மதியினால் மருவி நின்ற மாணிக்கமே!
மா தீசர் மணவாளா!
மதியினால் மதியதாகி மனமதுளே
மறையுமான மறையோனே!
மலர்வினால் மலருகின்ற **மகாரமே**
மனமகமாம் மாதேவ!
மதி சூடும் மாண்பே! மலையவனே!
மதியிலேன் சரணம் சரணம்.

3. அறிவினால் அருவமாகி அன்பினுள்
அடக்கமா மென் அப்பனே!
அறிவினால் அறிவதாகி அகமதுள்
ஆடு மென் அன்பனே!
அதிர்வினால் ஆத்மனான **அகாரமே**
ஆலிக்கு மென் ஆலயமே!
அறிவினை யளித்து அறிதுயில்
அருளினாய் சரணம் சரணம்.

4. இறப்பினால் இளமையாகி இருக்கினுள்
இதய மான இன்பமே!
இறப்பினை இனியதாக்க இகமதுள்
இலங்குமென் இனிமையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்துள் இறங்கிய என் இகாரமே!
இசைகின்ற இசையவனே!
இயல்பினை இயற்றுவித்த இகபரனே!
ஈசா! சரணம் சரணம்.

5. எழுத்தினால் எழுத்ததை எழுதிய
எம்பெருமான் என்னவனோ!
எழுத்திலே எழுந்த யென் ஏகனோ!
என்னகனோ! என்னகமோ!
எழிலினால் எழுதும் எகாரமே!
என்னப்பனே! என் ஐயனே;
ஏகாந்த எதிரிலே எழுவதோ!
ஏதறியேன்! சரணம் சரணம்.

6. அன்பனே! என் அப்பனே! அம்மையே!
அந்த மாதியில்லா அகாரமே!
உவமையே! என் உலகமே! உரையதே!
உயிரிலே உறங்கும் உகாரமே!
மன்னினால் மனமதை மாழ்விக்கும்
மறையதுவே!! மகாரமே!
இன்நிலையோ டிசைகின்ற இகாரமே!
எகாரமே! ஓம் சரணம் சரணம்:

7. தூங்கி யிருக்கு மென்னைத்
தூக்கு மென் தூயவனே!
தாங்கி யிருந்தே யென்னைத்
தத்துவ னாக்கிய தலைவனே!
வீங்கி யெழுந்தே யென்னை
வாங்கிய வானவனே!
பாங்கி னிலேபா பகரும்
பரமா சரணம் சரணம்.

8. கனவிலே கலங்குகின்ற என்னை
கனல் காட்டும் கழலோனே!
நனவிலே நடுங்குகின்ற என்னை
நடுவ னாக்கும் நாயகனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினையிலே விழிக்கின்ற என்னை
விடுவிக் கின்ற விமலனே!
சுனையிலே ஆடிக் காட்டும் என்
துரியா துரியமே சரணம்.

9. நடையிலே தளரும் எனக்கு
நடை துணையான நாதா!
இடையிலே இடரும் எனக்கு
இருவழி யழிக்கும் இமையவனே!
தடையிலே தடங்கும் எனக்குத்
தண்ணொளி காட்டித் தனது
குடையிலே குலவக் காட்டிய
குருவே! சரணம் சரணம்.

10. என்னப்பன் என்னய்யன் என்னத்தன்
என்றோ வென்று கதற
என்னப்பு என்தேயு என்வாயு
என்வெ ளியெனவே அலற
என்மனம் என்புத்தி என்சித்தம்
என்றோ வென்று பதற
என்தன் பெருமான் ஏற்றியெனை
எடுத்தான் சரணம் சரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9 சிவஞானக் கேள்வி

1. என்நிலை காட்டியே தன்நிலை யாகிய
எவனிவ னாமாமோ
என்னது காலமும் தன்கழ லாகிய
ஏகனு மாமாமோ
என்னினி லேயொரு எச்சமு மாகிய
எம்பர னாமாமோ
என்னவ னாகியே தன்னவ னாகிய
எந்தையு மாமாமே.

2. பண்ணது பண்ணியே பந்தமு மாகிய
பாசமு மாமாமோ
மண்ணினி லேயொரு மாண்பது வாகிய
மாதவ மாமாமோ
எண்ணினில் வந்து எழுத்தது வாக்கியம்
எண்திசை யாமாமோ
எண்குண மாகியே என்னக மாகிய
எண்ணமு மானவனே.

3. கண்ணது வாகியே கண்ணக மாகிய
காட்சியு மாமாமோ
அண்ணலு மாகியே அண்மையுமாகிய
அங்கமு மாமாமோ
பெண்ணெனு மாணெனும் பேதமை நீங்கிய
பெண்ணவ னாமாமோ
எண்குண மாகியே என்னக மாகிய
எண்ணமு மானவனே.

4. வேதமு மாகியே வேள்வியு மாகுமென்
வேதிய னாமாமோ
வேலவ னாகியும் வேதிய னாகியென்
வேரவ னாமாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானமு தாகியென் வானவ னாகிய
வள்ளலு மாமாமோ
வாசக மாகியென் வாழ்வது மாகிய
வார்சடை யானவனே.

5\. சந்தம் பிறந்தொரு சத்திய மாகிய
சந்திர னாமாமோ
சாதக னாய்வர சாமரை வீசிய
சாமமு மாமாமோ
நித்தம் நினைந்தொரு நித்திய மாகிய
நிஷ்கள னாமாமோ
சந்து திரிந்தொரு சித்தது வாகிய
சத்திய னாமாமே.

6\. சிந்தை கலங்கிடச் சித்தது சிந்திய
சித்தனு மாமாமோ
விந்தை விளங்கிட வித்தது வீசிய
விண்ணவ னாமாமோ
கந்தை துலங்கின காமனு மோடின
காலனு மாமாமோ
எந்தை எழுந்திட என்முன தாகிய
என்னவ னாமாமே.

7\. போதனை தந்திட வேதனை தந்தவென்
போதக மாமாமோ
பாதகம் பண்ணின பாவியைப் பாடிய
பாவமு மாமாமோ
வாதனை பண்ணிய வாசகம் தந்தவென்
வாழ்வது மாமாமோ
வார்குழ லாள்வர வானக மேகிய
வானவ னாமாமே.

8\. அன்பு பிறந்தொரு அன்பனுமாகிய
அப்பனு மாமாமோ
அன்பு மலர்ந்தொரு அன்னையு மாகிய
அம்மையு மாமாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியி லேயொரு ஆலய மாகிய
ஆகம மாமாமோ
ஆரிவ னானென ஆணைய தாகிய
ஆரிய னாமாமே.

9. அஞ்சினில் வந்தொரு அஞ்சது வாகிய
அஞ்சக மாமாமோ
நெஞ்சினில் நின்றொரு நெய்யது வாகிய
நெய்யக மாமாமோ
வஞ்சியில் வந்தொரு வையக மாகிய
வஞ்சக மாமாமோ
பஞ்சது பஞ்சணை அஞ்சது வாகிய
பாதமு மானவனே.

10. நல்லையில் நின்றொரு நாடக மாடிய
நாதனு மாமாமோ
எல்லையில் எய்தியே ஏனம் எண்ணிய
ஏகவ னாமாமோ
சொல்லது வாகிய சூசக வாசகம்
சொக்கனு மாமாமோ
தில்லையில் ஆடிய திருமண மானவன்
தில்லைய னாமாமே.

11. அன்பு வளர்ந்தொரு அந்தமு மாகிய
அன்னையு மாமாமோ
அன்பு கடந்தொரு ஆதியு மாகிய
அத்தனு மாமாமோ
அன்பு இருந்தொரு ஆதர வாகிய
ஆதவ னாமாமோ
அன்னையு மாகியே அப்பனு மாகிய
அஞ்செழுத் தானவனே.

12. கேள்வி வளர்ந்தொரு கேள்விக ளாகிய
கேள்விய னாமாமோ
கேடு கழன்றொரு கோசமு மாகிய
கோமக னாமாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோது கலைந்தொரு கோகுல மாகிய
கோகழி யாமாமோ
கோவது வாகியே கோகழி யாகியென்
கோயிலு மானவனே.

13. நாதம் பிறந்தொரு நாதமு மாகிய
நாயக னாமாமோ
நாவினி லேயொரு நாடக மாடிடும்
நம்பனு மாமாமோ
நானென நானென நின்ற நடுக்கம்
நடந்தது மாமாமோ
நாயகனே என் நாட்டினிலே வரும்
நாதமு மானவனே.

14. காதல் பிறந்தொரு காயமு மாகிய
காதல னாமாமோ
காமம் கழிந்தொரு காவலு மாகிய
காரிரு ளாமாமோ
காலம் கடந்தொரு கூடலு மாகிய
காலனு மாமாமோ
காதம் கடந்தொரு கானமு மாகிய
கோவது வானவனே.

15. கண்கள் விழித்தொரு காவலு மாகிய
கானவ னாமாமோ
கண்கள் கலந்தொரு காட்சியு மாகிய
காதலு மாமாமோ
கண்களி லேயொரு கன்னியு மாகிய
கண்ணவ னாமாமோ
கண்களு மாகியே கன்னியு மாகியென்
கண்ணக மானவனே.

16. ஒன்று பிறந்தொரு ஒன்றது வாகிய
ஒன்றவ னாமாமோ
ஒன்று வளர்ந்தொரு இரண்டது வாகிய
இரண்டவ னாமாமோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று நடந்தொரு மூன்றது வாகிய
மூன்றவ னாமாமோ
ஒன்று இருந்தொரு நாலது வாகிய
நான்மறை யானவனே.

17. கருணை பிறந்தொரு கருணையு மாகிய
கருணையு மாமாமோ
கருணை வளர்ந்தொரு கழலது வாகிய
கருவது வாமாமோ
கருணை விழித் தொரு காவலு மாகிய
காதக மாமாமோ
கருணையு மாகியே காவலு மாகியென்
கருவவ னானவனே.

18. அருள் பிறந்தொரு அருளது வாகிய
அருளக மாமாமோ
அருள் மலர்ந்தொரு அருவுரு வாகிய
அருளொளி யாமாமோ
அருள் கடந்தொரு அவனியு மாகிய
அகமுக மாமாமோ
அருளது வாகியே அவனியு மாகியென்
அகரமு மானவனே.

19. சிவமது ஆகியே சிவம்அது வாகிய
சிவனவ னாமாமோ
சிவசிவ மோதியே சிவசிவ னாகிய
சிவபொரு ளாமாமோ
சிவவசி யாகியே சிவசியு மாகிய
சிதம்பர மாமாமோ
சிவசிவ ஓமென சிவசிவ ஓமென
சிவசிவ ஓமாமே.

20. சிவஓம் சிவஓம் சிவசிவ ஓமெனும்
சிந்தையு மாமாமோ
சிவஓம் சிவஓம் சிவசிவ ஓமெனச்
சீவனு மாமாமோ
சிவஓம் சிவஓம் சிவசிவ ஓமெனச்
சிவனவ னாமாமோ
சிவஓம் சிவஓம் சீஓம் சியெனச்
சிவசிவ ஓமாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 10 சிவமாதல்

1. முன்னைவினை முழுதாக முடிவிக்கும் முனியவனே
பின்னைவினை புதிதாகப் பிசைவிக்கும் புதியவனே
என்னைநினை எனதாக ஏடுதரும் எனதவனே
தன்னைஎனக் களித்து விட்டான் சிவமாமே.

2. அல்லும்பகல் அறியாத அன்பனையே அமரவைத்து
அங்கமெலாம் ஆறவைத்து அந்தமிலா தாகிநின்று
அஞ்சதுவு மாகவைத்து அஞ்செழுத்து மானவனே
அம்மையெனக் களித்து விட்டான் சிவமாமே.

3. நல்லதொரு நிழலாக நாநிலத்தே நாடிவந்து
நம்மதொரு நிலைகாட்டும் நாதாந்த நாயகனே
நங்கையொடு நாடிவந்து நாளாந்த மாகிநின்று
நம்மையெமக் களித்து விட்டான் சிவமாமே.

4. சொல்லவொரு சொல்லாகிச் சொந்தமது வாகிவந்து
செல்லவொரு செயலாக்கிச் சேய்திதனைச் கூறிநின்று
செல்வமொரு செடியாகிச் சேயோன்தன் நிழலாகிச்
சொக்கனெனக் களித்து விட்டான் சிவமாமே.

5. எங்குமொரு நிலையாகி என்னதிடம் ஏகிவந்து
அங்கமொரு அனலாகி அன்புவொரு அருளாகி
ஐயருருவாகி வந்து ஐயமது அகலவிட்டு
ஐயனெனக் களித்து விட்டான் சிவமாமே.

6. இன்பமொரு நிலையாகி இன்னமுது ஊட்டவென்று
இன்னதொரு இயல்பாகி இருவினை யோடவிட்டு
இந்தவொரு இந்திரியம் இழிவிக்கும் இமையவனே
இன்னுமெனக் களித்து விட்டான் சிவமாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கண்களொரு வழியாகிக் காதுமொரு வழியாகிக்
கண்டமொரு வழியாகிக் காவலவன் காணவந்து
கண்களக மாகிநின்று காமேசராக வந்து
கண்ணுமெனக் களித்து விட்டான் சிவமாமே.

8. வேதமொடு ஆகமமும் வேள்விகளு மாகவந்து
வேகமொடு வேதியராய் வித்தாரம் வீசிநின்று
வேளமொடு வேங்கையராய் வெஃகாரம் நீக்கவென்று
போதமெனக் களித்து விட்டான் சிவமாமே.

9. என்னதுடல் உருவாக என்னதக மேகிநின்று
என்னதுயிர் அருளாக ஏகாந்த மாகிநின்று
என்னையெனக் கெளிதாக்க என்நாளு மெழுந்தருளி
என்னையெனக் களித்து விட்டான் சிவமாம்.

10. ஆதியிலே அறிவாகி அஞ்செழுத்து மோதவைத்து
ஆகுதியி லனலாகி அஞ்செழுத்து மாகிநின்று
ஆனந்தமா யாடியென்னுள் ஆகமமும் ஆகிநின்று
ஆலயமு மாகி விட்டான் சிவமாமே.

11. என்னையொரு பொருளாக்கி ஏடெடுத்து ஏகிவந்து
தன்னையொரு மொழியாக்கித் தாலாட்டுப்
பாடவைத்து
பின்னையொரு வழியாக்கிப் பித்தாக்கும்
பிஞ்ஞகனே
தன்னையெனக் களித்து விட்டான் சிவமாமே.

12. மங்கையொரு பாகமுமாய் மதிதனைச் சூடிநின்று
கங்கையொரு காவலுமாய்க் கருதனைக்
காணவென்று
அங்கமொரு நீறாகி அவனியில் அருளான
மஞ்சமெனக் களித்து விட்டான் சிவமாமே.

13. அங்கமொரு அழலாக அஞ்சதுவு மாகிவந்து
அம்மையொரு இடமாகி அல்வலமு மேகிநின்று
அஞ்சினிலே அறிவதனை அஞ்சாகி ஓதிநின்று
அம்புமெனக் கெய்து விட்டான் சிவமாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பாதமொரு பதியாகிப் பாவனையின் வழியாகி
வேதமொரு மொழியாக வேதியனும் குருவாக
வேலுமது வீசிநின்று வீரமது விளைவாக
வேடமெனக் களித்து விட்டான் சிவமாமே.

15. சிந்தையொரு சிறகாக சீலமது வாகவந்து
சிந்தையொரு மலராக சிருங்கார மாகிநின்று
சிந்தையொரு சிவமாக்கி சிங்கார மாகவந்து
சித்தமெனப் பிடித்து விட்டான் சிவமாமே.

16. எந்தைநிலை எழுதாது ஏடுதனை ஏந்திவந்து
முந்தைநிலை மொழியாது மூடுபனி யாகிநின்று
விந்தைநிலை வினவாது வீரியமும் பேசாது
தந்தையெனக் களித்து விட்டான் சிவமாமே.

17. கையிலொன்று அனலேந்தித் திரிபுர மேவிவந்து
கையிலொன்று உடுக்கேந்திச் சப்த்தமது வாகிநின்று
கையிலொன்று கழல்காட்டிக் கையதுவே சரணாகி
கைலாசம் அளித்து விட்டான் சிவமாமே.

18. ஸ்திதியொரு தினமாக தில்லையிலே ஆடிநின்று
ஸ்லயமொரு தினமாக எல்லையிலே ஓடிவந்து
சங்கார மாகிநின்று சங்கீத மாகுமெந்தன்
சங்கார னாகி விட்டான் சிவமாமே.

19. அன்போடு ஆகிவந்து ஆகார மாகிநின்று
என் போடு ஏகிவந்து எல்லாமு மாகிவந்து
இன் போடு ஆகுமெந்தன் இகபர மானவனே
அன்பதா யமர்ந்து விட்டான் சிவமாமே.

20. ஓதுமொரு பொருளாகி அருவுரு வாகிநின்று
ஓதுமொரு வழியாகி ஒரு நிலை யாகிவந்து
ஓதுமொரு செயலாகி ஒருகழி யாகியெந்தன்
ஓங்கார மாகி விட்டான் சிவமாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஈ) சிவகோவையார்

1. அடியெடுத் தடியாகி அடிகொடுத் தங்கே
அடியுமா மந்தமாம் அணங்கு - அடிகளார்
சிவகோவை சொல்லிச் சிவசாறு சாத்தும்
சிவகோவை யார் மொழி.

2. அளவளாவி அந்தம் அளவுமாகி அந்த
அளவிறல் அறிவே அவளாம் - அளவிலார்
சிவகோவை செய்து சிவமாது சேர்ந்த
சிவகோவை யார் வழி.

3. அணையாகி அங்கம் அணுவாகி அங்கே
அணையாத ஆதி அகலாம் - அனந்தர்
சிவகோவை ஆகிச் சிவஜோதி ஆகும்
சிவகோவை யார் பதி.

4. அபிமானம் ஆகி அதிஞானம் ஆகி
அதிஞானி ஆகும் அறிவாம் - அறிஞர்
சிவகோவை யோதிச் சிவஞானி யாகும்
சிவகோவை யார் நிதி.

5. அருகே இருந்து அருவின் உருவாய்
அருளே ஆனஎம் அழகாம் - அருளார்
சிவகோவை பாடும் சிவசித்தர் பாஷை
சிவகோவை யார் பொதி.

6. அந்தமாம் ஆதியாம் அனந்தமாம் அந்தரம்
அந்தநாள் அனலதாம் அங்கம் - அழகர்
சிவகோவை புனையச் சிந்தையே புகுந்து
சிவகோவை யார் புதிர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. அநேகம் ஆகியும் அதேகம் ஏகியும்
அதேமுக மாகிய அங்கம் - அன்பர்
சிவகோவை சூடிச் சிரமதே ஏகும்
சிவகோவை யார் பா.

8. அந்தரத் தமர்ந்து அப்பதிய தாகுமென்
அந்தரங் கத்தின் அரங்கம் - அநேகர்
சிவகோவை சேய்தி சிவமாகி யாகும்
சிவகோவை யார் மலர்.

9. அகல் அகமாம் அனல் அறிவகமாம்
அகமுக மாமத னாடை - அகவோர்
சிவகோவை போதம் சிவமான பாதம்
சிவகோவை யார் சிலை.

10. அஞ்சும் அணைய அஞ்சினை ஆக்கி
அஞ்சது வாகும் அஞ்சாம் - அஞ்சோர்
சிவகோவை போகம் சிவமான பாகம்
சிவகோவை யார் திலை.

11. அடங்காத என்னை அடக்கியே அடிவைத்த
அறிவின் அழகாம் அணங்கே - அடபார்.
சிவனாம் சீவன் சிந்தையாம் என்றாள்
சிவமாது எனும் அலை.

12. இளமை இனிமை இதயம் இவையே
இன்ப வழியாம் அணங்கே - இளையோர்
சிவனாம் சீவன் சிந்தையாம் என்றாள்
சிவமாது என்னும் கலை.

13. இடரும் இவனும் இருந்த இடத்தே
இடபம் இலையே அணங்கே - இடபர்
சிவனாம் சீவன் சிந்தையா மென்றாள்
சிவமாது என்னும் சிறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. இனமும் இயல்பும் இல்லா இடத்தே
இயைபு இருக்கோ மணங்கே - இனத்தோர்
சிவனாம் சீவன் சிந்தையா மென்றாள்
சிவமாது என்னும் சிகை.

15. இணங்கும் இணைவு இல்லா இடத்தே
இணைதல் தடையாம் அணங்கே - இருவர்
சிவனாம் சீவன் சிந்தையா மென்றாள்
சிவமாது என்னும் பொறை.

16. இருவர் நினைவே இருந்தால் நிகழ்வேதும்
இல்லா திருக்கும் அணங்கே - இருவர்
சிவனாம் சீவன் சிந்தையா மென்றாள்
சிவமாது ஆகும் தலை.

17. இவனையே காணவே இழந்தஎன் கண்கள்
இவனாய் இருக்கும் அணங்கே -- இனியோர்
சிவனாம் சீவன் சிந்தையா மென்றாள்
சிவமாது ஆகும் வலை.

18. இகத்திலே இன்பம் இருவர் இணைந்தால்
இரத்தலே இல்லையாம் அணங்கே – இரவோர்
சிவனாம் சீவன் சிந்தையா மென்றாள்
சிவமாது ஆகும் பலம்.

19. இன்பமே இன்பமே இகத்திலே இல்லையேல்
இன்பமே யாகுமென் அணங்கே – இனத்தில்
சிவனாம் சீவன் சிந்தையா மென்றாள்
சிவமாது ஆகும் தவம்.

20. ஈனமே இரக்கம் ஈரமே இவையால்
ஈடதே பேறாம் அணங்கே – ஈவோர்
சிவனாம் சீவன் சிந்தையா மென்றாள்
சிவமாது ஆகும் சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. அழகே அறிவும் அன்பே அவைதான்
ஆரமே யாகுமென் மாதே - அழகர்
சிவமே சக்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

22. அங்கமே புணர்ந்து அடிசிலே பகர்ந்துஎன்
அங்கம் படைத்த மாதே - அறிஞர்
சிவமே சக்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

23. அஞ்சலி பேசியே அஞ்சனம் பூசியே
அஞ்சது வாகும மாதே - அஞ்சோர்
சிவமே சத்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

24. நாடும் நகரமும் நடுங்க நடந்து
நாடியே நிற்குமெம் நங்கை - நாதர்
சிவமே சக்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

25. கண்களே கலந்து காலமே குறைந்து
கால்களே இணைத்த நங்காய் - நாதர்
சிவமே சக்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

26. உளமது உழுது உணர்வது உயர
உறவது உவந்த அவளாம் - உணர்வோர்
சிவமே சக்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

27. வீடும் வளவும் வேலியும் கோலியே
வாடும் எனக்கு வகையானாள் - விட்டோர்
சிவமே சக்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. பாதமே பதியாய்ப் பரவியும் பேசியும்
ஓதமே ஒலிக்கும் ஒருவள் - பரமர்
சிவமே சக்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

29. ஆடையே ஊரிடம் அணிகளே உறைவிடம் என
ஐந்தும் ஆக்கியே அளந்தனள் – ஆலமர்
சிவமே சக்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

30. உடலதே ஊடியும் உவகையே ஊட்டியும்
உடலகம் ஆகிய அவளாம் - உரியோர்
சிவமே சக்தியாம் சிந்தையே சீவனாம்
சிவஜோதி ஆனதே அது.

31. உடலும் தடவியே உணர்வும் தொடரவே
உயிருட் புகுந்த அவளாம் - உறவோர்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

32. நாதமே தந்து நாவிந்தே தொடுத்துஎன்
நாவிலே எழுந்த நங்கையாம் – நவில்வோர்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

33. அமுத ஆலயம் அழகாய் அமைத்த
அமுத அருந்தேன் முலையாள் - அமுதர்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

34. பலநாள் அலைந்து பலநாள் அழுதேன்
ஒருநாள் மலர்ந்தாள் நங்கை - புலவோர்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. நாதம் எழுந்தே நாளும் இசைந்தே
நாத விந்ததாம் நங்கை - நாதர்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

36. அறுபத்துநால் புள்ளி அலசியே ஆய்ந்து
அறமோதி அணையும் நங்கை – அன்பர்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

37. காதல் நோற்கவே காலம் நேரம்
ஏவலே ஏகாள் நங்கை – காமர்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

38. வேஷமே கோஷமே வேண்டாத கோலமே
வேதமே ஆகும் நங்கை – வேதியர்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

39. கூசாதே குவலயக் குடியுளே குழைந்து
பேசாதே இருக்கும் நங்கை - குமரர்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

40. வெருளவே மருளவே வெருட்டியும் மருட்டியம்
அருளதே புரியும் நங்கை – வேகமழிக்கும்
அண்ட சராசர அகிலாண்ட சங்கரியே
அண்மையே ஆனதே அது.

41. இருத்தியே எழுப்பியும் இருந்தே எழுந்துமென
ஒருவரே ஆகும் அம்பிகை - இருக்கினுள்
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. உள்ளத்து உழவே உழவென்று உரைசெய்து
உள்ளத்து ளிருக்கும் நங்கை - உள்ளில்
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.

43. தொழிலகம் உளதாகித் தொடராக்கி உள்ளாக்கி
ஒளியகம் ஆகுமென் நங்கை - தொண்டர்
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.

44. நூலகம் நூலாகி நூற்பதை நம்முளே
நுகரவே அழைக்கும் நங்கை - நுதலோர்.
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.

45. தொழில் தேடிவீணே தொலையும் தொகையரைத்
தொழிலாக்கி யுள்ளாள் நங்கை - தொழுவோர்
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.

46. பாவினைப் பாடியே பதறுமென் பண்பினைப்
பாவனை ஆக்கி பாவையே – பாதியோர்
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.

47. பேச்சுக்கள் பேசியே பொருமிய பெருமையால்
பேச்சதே யறுத்த பெண்ணவள் – பெரியதோர்
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.

48. நாவன்மை பார்த்தே நயமாகிப் போனதால்
நாவையே அடக்கிய நங்கை - நம்மதோர்
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. அதிகாரம் செய்துதான் அடக்கிய செகத்திரே!
அதிகாரமில் பாதையே அம்பிகை - அறிவீரே
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.

50. அளவுகோல் கொண்டுதான் அளவிடும் கொடுமையீர்
அளவிறந்த அன்படா அம்பிகை - அளவிலா
அம்மையாகி அப்பனாய் ஆதியில் அமரும்
அர்த்த நாரீஸ்வரமா மது.

51. தந்தையாகித் தாயுமாய்த் தாரமாகித் தனயனாய்ச்
சிந்தையாகித் தரணியாய் மலர்ந்தனள் - தஞ்சமோர்
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

52. தென்றலாகித் தெப்பமாகித் தேமரத்துத் தேனுமாகி
அன்றிலாகிப் பங்கயத் தமர்ந்தனள் - தெவிட்டிடா
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

53. அங்கம் முழுதாய் அணைத்து முன்னே
தங்கநிறமாய்த் தளிர்விடுவள் - அங்கேதான்
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

54. ஆடம்பர மின்றியே ஆலயம் அமைத்துக்
கூடலாம் என்றே கூவினள் - ஆடுவாள்
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

55. 'நீயே அது அதுவே நீ' எனச்
சேயே தாயெனச் செபித்தனள் - நாதராய்த்
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

56. நானென்ன தானென்ன அவனென்ன இவனென்ன
கோவெனக் கோனெனக் கூவினள் - நாடினால்
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57. நாளென்ன கோளென்ன நடையென்ன கொடை
யென்ன
நாதாநா தாந்தமென்றே நவின்றாள் - அநாதியிலே
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

58. அஞ்சிலேல் என்று கூறி அஞ்செழுத்து என்றுநின்று
நெஞ்சிலே குடிபுகுந்த நேரிழையாள் - அஞ்சினவர்
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

59. மணியோ கேட்டெழ மனமோ காட்டெழப்
பணியோ பணியெனப் பகர்ந்தாள் - மணம்சிவம்
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

60. ஒருநாட் பாடுமே ஒருநாள் ஆடுமே
ஒருநாட் தேடும் ஒருத்தியை - ஒரேபொருள்
தத்துவமே நாயகி தவவழியே நாமகள்
தத்துவ மசியா மது.

61. ஐம்புலனில் ஒருபுலன் இருசெயல் ஆற்றலில்
அஞ்சு நீ வாய்க்கென அலறினன் - ஐயரே
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

62. விடுதலையைத் தேடியே வீணே தொலையாது
விடுப்பை முழுதாய் நிறுத்தினள் - விடுவிக்கும்
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

63. நடப்பதுதானே என்றும் நடக்கின்றதே என்று
நடையே துணையாகி நின்றாள் - நடனத்தால்
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

64. மனமாகிய காட்டில மதியாகிய குகையுள்
மனையாகிய இதயம் மனைவள் - மணவினையால்
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

65. சகிப்புத் தன்மையே சமய தத்துவமெனச்
சுகித்தே சுத்தமாய்ச் சுழன்றாள் – சகியேஎன்
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

66. பயத்தை நீக்கியேதன் பதத்தை நாட்டியப்
பழத்தைக் கொடுத்த பெண்ணாம் - பயமிலா
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

67. தன்னையே ஆய்கத் தரணியும் அடங்குமெனத்
தன்னையே தந்த அத் தலைவியே – தன்னினால்
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

68. புள்ளிக்குப் பலகோடி பாதைகள் படைக்குமால்
பள்ளியின் சத்தியம் பாதையிலென்றாள் - பள்ளியிலே
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

69. ஒருபுத்தர் ஒருநபி ஒருயேசு ஒருபொழுதேயென
ஓராயிரம் ஞானி உதிக்குமென்றாள் – ஓரிரேல்
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

70. ஞானம் அடைந்த ஞானியர் அனைவரும்
ஞான சிவமென்ற தம்பாள் – ஞாலத்திலே
மோனமே ஞான மொழியது ஞான்ற
மௌன வாக்கிய மது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

71. எல்லோரும் உன்குருவே! எல்லோரும் உன்தாயே
எல்லோரும் என்பிள்ளையே என்றனள் -
எல்லையில்லா
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையா மது

72. குறிக்கோளும் இல்லையே குலம்கோளும் இல்லையே
குறியடா என்றுதான் குளறினள் – குறிப்பினால்
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையா மது.

73. காரணம் ஏதடா! காரியம் ஏதடா!
காதையே அடையடா என்றனள் – கார்குழலாள்
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையான மது.

74. பார்ப்பதும் ஆரடா! பார்வையும் ஆரடா!
பார்ப்பனே! உன்னுளே! என்றனள் – பார்வையால்
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையா மது.

75. கேட்பதும் ஆரடா! கேள்வியும் ஆரடா!
கேள்வியன் உன்னுள்ளே! என்றனள் - கேள்வியால்
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையா மது.

76. பண்டாரம் ஆனதும் பண்டமும் ஆனதும்
பண்ணதும் ஆனதும் என்றனள் – பண்பொடு
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையா மது.

77. கள்ளனும் நீயடா! காமனும் நீயடா!
காலனும் நீயடா! என்றனள் – கள்ளொடு
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையா மது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

78. கோலமும் ஏனடா! கொட்டிலும் ஏனடா!
கோயிலே நீயடா! என்றனள் - கோமகள்
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையா மது.

79. அதுதான் கண்ணகம் அதுதான் காதகம்
அதுதான் வாயகம் என்றனள் - அதுமூச்சென்று
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையா மது

80. ஆலோசனை ஏதடா! ஆலாபனை ஏதடா!
ஆலயமா மாவதே என்றனள் - ஆலமர்
என்பை உருக்கியே என்னை உணர்த்திய
எந்தையான உண்மையா மது.

81. கண்ணையும் மூடியே காதையும் மூடியே
கணமதாக மூக்குவாயை மூடினள் – கண்ணவள்
நெற்றியின் நடுவெழுந்து நேரதாகி நிலவிநின்று
நற்றிரு நாளதா மது.

82. உள்ளம் உருகியே உணர்வும் உறைந்த போது
உள்ளுதல் உரையும் உவந்தனள் - உளவினள்
நெற்றியின் நடுவெழுந்து நேரதாகி நிலவிநின்று
நற்றிரு நாடக மது.

83. பூதரும் உள்ளே புகுந்து உழட்டிநல்
பாதமே பங்கயம் என்றனள் - பூதலத்தில்
நெற்றியின் நடுவெழுந்து நேரதாகி நிலவிநின்ற
நற்றிரு நாடதா மது

84. சுப்பரும் சுத்தியங்கு கொல்லையிற் சுழன்றதால்
சுத்தரே சித்தராம் என்றனள் - சுக்கிலே
நெற்றியின் நடுவெழுந்து நேரதாகி நிலவிநின்ற
நற்றிரு நாதமா மது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

85. சுங்கானைப் பிடித்துச் சுகமாகப் பொருத்தியே
சங்கானை சந்தானம் என்றனள் - சங்கரே
நெற்றியின் நடுவெழுத்து நேரதாகி நிலவிநின்ற
நற்றிரு ஒளியதா மது.

86. சிதம்பரப் பிள்ளையும் சிதம்பரப் பள்ளியுமெம்
சிதம்பர மாம் சீலம் என்றனள் – சிதம்பரனார்
நெற்றியின் நடுவெழுந்து நேரதாகி நிலவிநின்ற
நற்றிரு நாதமா மது.

87. சிவலிங்கரைத் தேடச் சிவராமலிங்கரே தேடிவரச்
சிவமாதோ சிலிர்த்து நின்றனள் - சிவமாமந்த
நெற்றியின் நடுவெழுந்து நேரதாகி நிலவுமந்த
நற்றிரு நாமமா மது.

88. பஞ்சவாயு பஞ்சபூதம் பஞ்சகோசம் பஞ்சசீலம்
நெஞ்சிலேது மில்லையேதும் என்றனள் -
அஞ்சதுதான்
நெற்றியின் நடுவெழுந்து நேரதாகி நிலவுமந்த
நற்றிரு நாதரா மது.

89. கடல்நீரே உவர்நீக்கிக் கருமேகம் உயர்ந்துநின்று
உடல்நீரே உள்ளாகும் என்றனள் - கடல் உடல்
நெற்றியின் நடுவெழுந்து நேரதாகி நிலவுமந்த
நற்றிரு நாவிலா மது.

90. நாலுசந்திகூட்டிச் சென்றே நாலுவார்த்தை
கேட்டுவிட்டு
நாலடா காவடா என்றனள் - நாலினால்
நெற்றியின் நடுவெழுந்து நேரதாகி நிலவுமந்த
நற்றிரு நந்தவன மாமே.

91. கருவாய்க் கிடந்தென் கழலே கடைந்தென் நற்
குருவாய்க் குலவுமென் குமரியே! - குருவே!
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. புதிதாய்ப் பிறந்தென் பதியாய்ப் பதிந்தென்நற்
பொதியாய்ப் புலவுமென் பவளமே!- பதியதே!
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

93. நிலைபெறுமாறு நினைத்தென் நிலையதுவாகி
நிலைத்தென்நல்
நிலையமாய் நிலவுமேயென் நங்கை - நிலையெலாம்
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

94. ஓசையெலாம் ஒலித்தென் ஓதமெலாம் ஒருத்தென்நல்
ஓசையாம் ஓவியம் ஒருவளே! – ஓசையோம்
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

95. ஊனாகி இருந்தென் உயிராகி இரந்தென்நல்
ஊடகம் ஆகுமென் உமையவள் - ஊரெல்லாம்
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

96. அங்கலாய்பு நின்றே ஆராய்வும் நின்றே என்
அங்கமுள் அழலாம் அழகவள் – எங்குமாய்ப்
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

97. ஒருங்கிய மனம்பின் ஒருமையாய் மறைவெளியுள்
சுருங்கியதே மருங்கியதே சிறுமியாய் - ஒரேபொருள்
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

98. அமைதியாகி அழகுமாகி அதிகமாகி அளவுமாகி
அமைவுமான உறைவிடமே அவள் - அமைதியே
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

99. இறந்ததென் இருந்ததென் இசைந்ததென்
இழந்ததென்
பிறந்ததென் மறைந்ததென் மலர்ந்தனள் -
பிறப்பிறப்பிலா
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

100. வந்தவென் வேலையை வெற்றியாய் விடுத்தபின்
வந்தனம் ஆனவென் வசிமாதா! - அந்தமில்லா
பிரம்மதத்வம் பிரம்மநிஷ்டை பரமானந்த
பரமூர்த்தம்
பரம்முதித வதனமே அது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (உ) சிவமந்திரம்

### I இறைதுதி (நாற்பது)

#### முதுநிலை

1. முன் ஒருவன் முனி ஒருவன்
பின் ஒருவன் பனி ஒருவன்
தன் ஒருவன் தனி ஒருவன்
என் ஒருவன் என் அவனே 1

2. சிவன் ஒருவன் சிவம் ஒருவன்
அவன் ஒருவன் அழல் ஒருவன்
தவன் ஒருவன் தமர் ஒருவன்
எவன் ஒருவன் எழில் அவனே 2

3. வெளிர் ஒருவன் வெளி ஒருவன்
ஒளிர் உருவன் அளி உருவன்
தளிர் இயல்பன் தமிழ் வடிவன்
உயிர் வகையன் உணர் அவனே 3

4. நான் ஒருவன் தான் ஒருவன்
தேன் உருளும் தேர் வடிவன்
ஊன் உறவான் ஊர் உறவன்
தான் அவனே தான் சிவனே 4

5. மலை தனிலே மல ரினிலே
மன தினிலே மடு வினிலே
கலை தனிலே கட லினிலே
சிலை உருவன் சிவ மவனே. 5

6. நடை தனிலே நடை உருவன்
உடை தனிலே உடை உருவன்
விடை தனிலே விடை உருவன்
படை தனிலே படை அவனே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. என தினிலே என தொருவன்
உன தினிலே உன தொருவன்
தன தினிலே தன தொருவன்
எவ னிவனோ அவ னவனே. 7

8. ஒளி யினிலே ஒளிர் உருவன்
வெளி யினிலே வெளி உருவன்
ஒழி வினிலே ஒரு உருவன்
கழி தனிலே கோ அவனே. 8

9. ஒலி ஒளியாய் ஒளி ஒலியாய்
ஒலி உருவாய் ஒளி உருவாய்
ஒலி ஒலியோம் ஒளி ஒளியோம்
ஒலி ஒளியே சிவ ஒளியே. 9

10. வெளி வெளியாய் வெளி தனிலே
வளி வளியாய் வளி தனிலே
வழி வழியாய் வழி தனிலே
வெளி வெளியே சிவ வெளியே. 10

## சிவநிலை

11. அவனே ஒன்று அவனே இரண்டு
அவனே மூன்று அவனே நான்கு
அவனே ஐந்து அவனே நீ ஆறு
அவனே எல்லாம் அவனே சிவனே 1

12. அவனியும் அவனே அவனியில் அலர்ந்த
அழகனும் அவனே அழகினில் மலர்ந்த
அறிஞனும் அவனே அறிவினால் உதிர்ந்த
அறிஞானி அறிவித் தாய் ஓம் சிவசிவா. 2

13. அவமே யிருந்து அவனியில் அலைந்து
தவமே மறந்து தரணியில் தனித்து
சிவமே பிறந்து தரணிய தாகித்
தவமே மருந்து தவமே சிவமே. 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. நடையாய் நடந்து நாட்கள் நகர்ந்து
தடையாய்த் தடங்கித் தாள்கள் தளர்ந்து
இடையாய் இடர்ந்து இருவினை யிழந்து
நடையே இவனோ நடைதான் சிவமே. 4

15. அரியும் அவனே அரனும் அவனே
எரியும் ஒளியும் அவளும் அவனே
உரியும் உடலும் உறவும் அவனே
தெரிவாய் அதுவும் சிவமே சிவமே. 5

16. ஆதியும் அவனே அந்தமும் அவனே
ஆதியும் இல்லா அந்தமும் இல்லாப்
பாதியும் அவனே மீதியும் அவனே
ஜோதியும் சேய்தியும் அதுவே சிவமே. 6

17. ஓரில் ஒருவன் ஓர்இல் இருவன்
ஓதில் ஒருவன் ஓமில் ஒருவன்
ஓடில் ஓடும் ஒருவன் மூலன்
தேரில் தலைவன் தேரில் சிவமே. 7

18. ஊரில் உலவும் உலகும் அவனே
ஊதில் கேட்கும் சங்கும் அவனே
ஊனில் உறையும் உயிரும் அவனே
உணரில் உணர்வும் அதுவே சிவனே. 8

19. பாரின் பேரில் போரும் அவனே
பாவின் பொருளின் பெருமை அவனே
பாகின் பாதி பாவை அவனே
பாதம் பதியில் பதியே சிவமே. 9

20. வேதம் நான்கின் பேதம் நாவில்
கீதம் ஆயில் காதம் ஏகும்
நாதம் செல்லில் நாகம் சூடும்
பாதம் மேவும் போகம் சிவமே. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. யோகம் வேதியன் யாகம் வாதியான்
போகம் போதியின் பாகம் ஆகினான்
தாகம் தொடரில் தாய்மை ஆயினான்
சோகம் நீக்கிய சோதி சிவமே. 11

22. வெள்ளி மலையின் வேத நெறியன்
வெள்ளி உருவின் வேடம் உயிரன்
உள்ளில் உவகை உணரும் உடலன்
எள்ளி ஆடும் ஈசன் சிவமே. 12

23. கங்கா சலத்தின் குளிரின் சித்தம்
தங்கா திருக்கும் தலைவன் இளைஞன்
மங்கா மாசறு மாமலர் ஜோதி
பொங்கா விடினும் பாகம் சிவமே. 13

24. வெளியை ஒளியை வேட்கும் ஒருவன்
அளியை அருவை ஆட்கும் அமலன்
இழிவை உயர்வை அழிக்கும் உலகன்
பழியை ஏற்கும் பாதம் சிவமே. 14

25. காதல் உருவன் காதில் இனியன்
ஆதல் அறிவன் ஆவில் அமர்வன்
சாதல் சாற்றும் சாம வேதன்
பேரில் பெரியன் பேசும் சிவமே. 15

26. வளியில் மிளிரும் வள்ளல் மறையன்
வழியில் வளரும் விழியின் விமலன்
தெளிவில் தளிரும் தமிழின் தலைவன்
அளியில் அழிவில் ஆடும் சிவமே. 16

27. கானத் தொருவன் காமத் தினியன்
ஊனத் திருவன் ஊடல் அறியான்
ஞானத் தலைவன் ஞாலம் அறியும்
வானத் தொருவன் விண்ணின் சிவமே. 17


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. என்றும் எழுதான் ஏடும் ஏந்தான்
நன்றும் தீதும் நல்கான் தீண்டான்
கன்றும் தாயும் ஆனான் ஆனால்
அன்றும் இன்றும் ஒருவன் சிவமே. 18

29. எருதில் ஏறும் எளியன் ஏகன்
அருவில் அலரும் அழகோ அதிகம்
உருவில் உலவும் உறையும் உமையன்
தெருவில் திரியும் தலைவன் சிவமே. 19

30. ஆடும் அழகின் அசைவை அறியப்
பாடும் பொருளின் பெருமை புரியத்
தேடும் வகையின் தெளிவும் வளரக்
கூடும் கூடில் குலமும் சிவமே 20

31. யாரும் காணா யோகக் கொடையில்
ஊரும் பேணா உயிரின் பொறையில்
பேரும் நாணாப் பெரிய நிலையில்
சீரும் தேரும் சேரும் சிவமே. 21

32. நட்ட இருளில் நிட்டை இருப்பு
இட்ட வகையில் இலயம் விருப்பு
எட்ட நிலையில் எட்டி நாளும்
வட்ட திட்ட விட்டம் சிவமே. 22

33. பாதம் பதியில் போதம் பதியும்
'பாவம்' தொடரில் பாகம் புரியும்
வேதம் முடியில் வேடம் முடியும்
காதம் காலம் கடந்த சிவமே. 23

34. தன்நேர் இல்லாத் தமிழின் தலைவன்
முன்நேர் இல்லா முனியின் உருவன்
என்நேர் இல்லா இயல்பில் எளியன்
நன்நேர் ஆன நிலையே சிவமே. 24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வி கல்ப சமாதி

35. மனமும் இல்லான் மதியும் இல்லான்
இனமும் வாக்கின் இடமும் இல்லான்
தினமும் சித்தம் நிலையும் இல்லான்
கனகம் இல்லாக் கந்து சிவமே. 1

36. பாவம் இல்லான் புண்யம் இல்லான்
தாவும் நன்மை தீமை இல்லான்
காவும் தீர்த்தம் காவல் இல்லான்
கோவும் கூவும் கோயில் சிவமே. 2

37. அறமும் இல்லான் பொருளும் இல்லான்
மறமும் திறமும் இன்பம் இல்லான்
பிறவும் வீடும் பின்பும் இல்லான்
உறவும் உணர்வில் உள்ளான் சிவமே. 3

38. குருவும் இல்லான் குலமும் இல்லான்
பொருவும் சிஷ்யன் பொருளில் இல்லான்
உருவும் தாயும் தந்தை இல்லான்
அருவும் இல்லா அளியும் சிவமே. 4

39. என்றும் உள்ளான் அன்றும் உள்ளான்
இன்றும் அங்கும் இங்கும் உள்ளான்
கன்றும் தாயும் ஆகி உள்ளான்
பொன்றா ஒருவன் பெருமை சிவமே. 5

40. சிவமே எல்லாம் சிவமே எங்கும்
சிவமே சித்தர் சீவர் முத்தி
சிவமே சத்தி சீலம் சுத்தி
சிவமே சர்வம் சத்யம் சாந்தம் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## II போதனை <அறுபது>

### வெளிப்பாடு :

41\. முன்னின்று மொழிந்து முதற்கீடாய் முளைகொண்டு
தன்னின்று தளிர்த்துத் தவற்கீடாய்த் தளைவிண்டு
என்னின்று எழுந்து எனக்கூடாய் உயிர்கண்டு
மன்னியே மலர்ந்து மலமகற்றும் மகாதேவன். 1

42\. மண்ணின்று பிறந்து மனமீடாய்ப் பறந்து நின்று
விண்ணின்று உயர்ந்து வினைக்கீடாய் உருக்கொண்டு
ஒண்ணின்று ஒளிர்ந்து ஒருபொருளாய் ஒளிவிட்டுக்
கண்ணின்று கவர்ந்து கருவிருள் கழற்றினன். 2

43\. பண்ணின்று பிறந்து பார்முதலாய்ப் பரவியே
எண்ணின்று எழுந்து எழுத்தீடாய் ஏகியே
வெண்ணென்று வெந்து வேருடாய் வெளியாகி
தண்ணென்று தாவித் தளிர்ப்பதம் தடவினன். 3

44\. சொல்லொன்று வளர்ந்து சோதிமுதல் வகையாகி
சில்லொன்று அசைந்து சித்திரமாய் அரனாகி
செல்லென்று நெளிந்து சேய்தியாய் நிலையாகி
சொல்லாகிச் சில்லாகும் சொக்கனாம்
சோமேசன். 4

45\. உடலின்று கழன்று உணர்வூடாய்க் கழியாகி
விடலென்று விழுந்து விழிநிலையாம் விளைவாகி
அடலென்று அழிந்து அனலூடாய் அகலாகி
கடலென்று பிழிந்து கடலானான் காமேசன். 5

46\. உயிரின்று மலர்ந்து உயர்வாகி மறையாகிப்
பெயரின்று அலர்ந்து பெரிதாகி உறையாகிப்
பயிரின்று அமர்ந்து பழமாகி அமைவாகித்
துயிலின்று விரிந்த துரியாதீத விமலேசன். 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

47. தவமொன்று பிறந்து தனக்கூடாய்த் தளிர்விட்டு
அவமொன்று இறந்து அதற்கூடாய் வெளிவந்து
பவ மொன்று மறந்து பதமூடாய் மிளிராகி
நவ மொன்று மணியாக நல்கினான் மாதீசன். 7

48. தடையொன்று கழன்று துதியாகிக் கழலாகி
மடையொன்று சுழன்று மதியாகிச் சுனையாகிப்
படையொன்று உழன்று பதியாகி உயிராகி
விடையொன்று கழன்று விதியானான்
கருணேசன். 8

49. ஒளியொன்று ஒளிர்விட்டு ஒன்றாகி ஓமாகி
வெளியொன்று வெளிப்பட்டு வெளியாகி உயிராகி
அளியொன்று தளிர்விட்டு அணையாகி அமைவாக
வளியொன்று புறப்பட்டு வழியான பசுபதியே. 9

50. அன்பொன்று வெளிப்பட்டு அழலாகி விழியாகிப்
பின்பொன்று புறப்பட்டுப் பொதியாகிப் பொருளாகி
என்பொன்று உருப்பட்டு எழிலாகி உயிராகிக்
கன்றென்று கழல்காட்டும் கருணைக் கமலோனே. 10

51. வினையொன்று புறப்பட்டு விதியாகிப் புதிதாகச்
சுனையொன்று உருபட்டுச் சுகமாக உறவாகி
மனையொன்று மனைவித்து மனமாகி மதமாகிப்
பினையென்று பிசைவித்துப் பதியான பெருமானே 11

52. பயிரென்று முளைவிட்டுப் புவியாடி மனையாடித்
தயிரென்று கடைவிட்டுத் துயிலாடிக் குடையாடி
மயிலொன்று மதிவிட்டு முனையாடிப் பினையாடிக்
கயிறொன்று அறுபட்டுக் கழலானான் அமரேசன் 12

53. நிலையொன்று தெரிவித்து நிழலாகித் தெளிவாகிக்
கலையொன்று தருவித்துக் கழலாகித் தலையேகித்
சிலையென்று பெருவித்துச் சிறகாகிப் பதமாகி
மலையொன்று சமைவித்த மாதீசன் சங்கரனே. 13


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61 நதியாடி நடைபோட்டு நிதிகாட்டி நிலைகாட்டி
பதிகாட்டி நிடைகூடிப் படையோட்டி நிகராக்க
விதிமாற்றி வினைநீக்கி வளமான விளைவாகிக்
கதியான கருத்தான காஞ்சிமா குருவே! 2

62 துளியாகி நீராகித் துவண்டோடும் நதியாகி
அளியாகி அன்பாகி அருமறையின் அமர்வாகி
எளிதாகி எருதாகி எனதுளம் புகுமாறு
கழியாகிக் கோவான காஞ்சிமா குருவே! 3

63. ஒருபொருளை ஒருநிலையில் ஒருவடிவில் ஓதியே
ஒருசெயலை ஒருவகையில் ஒருமுறையில் ஓட்டியே
திருவுருவைத் திருமலையில் திருவருளால் தீட்டியே
கருநிலையைக் காட்டிய காஞ்சிமா குருவே! 4

64. பலவடிவில் பலவகையில் பலபோத பதமாகிச்
சிலவடிவில் சிரசிகையில் சிவபோத சிவமாகிக்
கலஉருவில் கதியாகிக் கவினாகக் கழலாகிக்
கலைநிலையைக் கூறிய காஞ்சிமா குருவே! 5

65. இலையுண்டு மரமில்லை இடமில்லை முளையுண்டு
தலைமொண்டு நீரள்ளித் தளிராகி நடைபோட்டு
அலையுண்டு அதிலாடி அதில்மீண்டு அணைதாண்டி
வலைகொண்டு விளையாடும் வளமான குருவே! 6

66. பேச்சில்லை மூச்சில்லைப் பெருமைகளும்
முனைவில்லை
நாச்சந்தி முந்தலிலே நவநாத சந்தியிலே
பாய்ச்சினார் நல்லதொரு பந்தலும் நாட்டியே
ஆச்சதே ஆச்சதே என்றென்றார் குருநாதர். 7

67. குறிகாட்டிக் குலம்காட்டிக் கொடிஏற்றிக் கோகாட்டி
அறிவூட்டி அழகூட்டி அயராது அனலாக்கிக்
கறிசெய்து கொடையாகக் கடைபூட்டிக் குடை
யேற்றிப்
பறியதே பறியதே என்றென்றார் குருநாதர். 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. அலையொன்று கடலாடி அதில்சங்கு குழலூதி
இலையொன்று வெளியாடி இயல்பாக வளிவீச
உலையொன்று உடலாடி உனதாகி எனதாகி
வலையொன்று தினமாட வீசுவான் திருமலையன். 14

55. பதமொன்று உருவாகிப் பயிராகி உயிராகி
விதமொன்று விளைவாகி விடையாகி விலையாகிச்
சதமொன்று விலைபேசிச் சிதமாகி வதமாகி
நதமென்று நதியாக நாடினான் நடராஜன். 15

## புலப்பாடு

56. தாயாகி அமிழ்தம் தினமேகி ஊட்டும்
சேயாகி இன்பம் சோராது ஈட்டும்
காயாகி எங்கும் கனியாகி ஏகும்
வாயார வாழ்த்த வழமான விமலன். 1

57. அருவாகி ஆதியின் அனலான அங்கம்
உருவாகி ஊர்தியின் உடலான உண்மை
பிரிவாகி இணைவாகிப் பெயரான இன்பம்
ஓமாகி ஓதுமுள் ஒளியான ஒருவன். 2

58. செயலாகித் திறமாகிச் செகமாகத் திகழும்
மயலாகி மலராகி மதுவான மணமும்
கயலாகிக் கனலாகிக் கருத்தான கழலும்
பயலாகி வந்துட் புகுந்தான் பார்பதியன். 3

59. அருளாகி அளவாகி அழகாகி அறிவாகிப்
பொருளாகிப் பொறையாகிப் பொதுவாகிப் பெரிதாகி
மருள்நீக்கி இருள்நீக்கி மதியேத்தி இகமாகி
உருளான உருவானான் உமையான லிங்கேசன் 4

## குருவிழி

60. வயல்காட்டி வளமூட்டி விதைதூவிப் பயிராக்கி
அயல் நாட்டில் அளவோடு தெளிவாக உறவாடி
அவல் கேட்டு அவளாகி அன்பான அணையாகிக்
கயல் ஏகிக் கருத்தாளும் காஞ்சிவாழ் குருதேவர். 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

61. நதியாடி நடைபோட்டு நிதிகாட்டி நிலைகாட்டி
பதிகாட்டி நிடைகூடிப் படையோட்டி நிகராக்க
விதிமாற்றி வினைநீக்கி வளமான விளைவாகிக்
கதியான கருத்தான காஞ்சிமா குருவே! 2

62. துளியாகி நீராகித் துவண்டோடும் நதியாகி
அளியாகி அன்பாகி அருமறையின் அமர்வாகி
எளிதாகி எருதாகி எனதுளம் புகுமாறு
கழியாகிக் கோவான காஞ்சிமா குருவே! 3

63. ஒருபொருளை ஒருநிலையில் ஒருவடிவில் ஓதியே
ஒருசெயலை ஒருவகையில் ஒருமுறையில் ஓட்டியே
திருவுருவைத் திருமலையில் திருவருளால் தீட்டியே
கருநிலையைக் காட்டிய காஞ்சிமா குருவே! 4

64. பலவடிவில் பலவகையில் பலபோத பதமாகிச்
சிலவடிவில் சிரசிகையில் சிவபோத சிவமாகிக்
கலஉருவில் கதியாகிக் கவினாகக் கழலாகிக்
கலைநிலையைக் கூறிய காஞ்சிமா குருவே! 5

65. இலையுண்டு மரமில்லை இடமில்லை முளையுண்டு
தலைமொண்டு நீரள்ளித் தளிராகி நடைபோட்டு
அலையுண்டு அதிலாடி அதில்மீண்டு அணைதாண்டி
வலைகொண்டு விளையாடும் வளமான குருவே! 6

66. பேச்சில்லை மூச்சில்லைப் பெருமைகளும்
முனைவில்லை
நாச்சந்தி முந்தலிலே நவநாத சந்தியிலே
பாய்ச்சினான் நல்லதொரு பந்தலும் நாட்டியே
ஆச்சதே ஆச்சதே என்றென்றார் குருநாதர். 7

67. குறிகாட்டிக் குலம்காட்டிக் கொடிஏற்றிக் கோகாட்டி
அறிவூட்டி அழகூட்டி அயராது அனலாக்கிக்
கறிசெய்து கொடையாகக் கடைபூட்டிக் குடை
யேற்றிப்
பறியதே பறியதே என்றென்றார் குருநாதர். 8


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

68. நெறியாக நிலைபோட்டு நிறைவோடு நிழலாகித்
தறியாத மரமாகத் தளிரோடி மறைவாக
அறியாத அருளாளர் அவனியில் அலறியே
மறியதே மறியதே என்றென்றார் குருநாதர். 9

69. ஒருநாளில் ஒருபொழுதில் ஒருவகையாய் ஒருப்பட்டு
வருநாளில் வருவழியில் வகைவகையாய் வழிப்பட்டுத்
திருநாளில் திருவிழவைத் திருவுருவில் தருவித்தே
தெருவதே தெருவதே என்றென்றார் குருநாதர் 10

70. அறமோதி அவளோடு அதிகார அளியேற்றித்
திறமோதித் திருவோடு திகிலூட்டித் தடைநீக்கி
மறவாது மறநீங்க மதியேற்றி மலராக்கித்
திறவதே திறவதே என்றென்றார் குருநாதர். 11

71. ஞானவுரு வென்று உணராத என்தனை
ஞானவுரு வென்றே உணர்வித்த உயிராளர்
போனதிசை யெல்லாம் புகவந்த எழிலாளர்
ஆனதொரு நிலைகாட்டும் அருளாளர் குருநாதர் 12

## வினைநிலை

72. வானவீதி யூடுசென்று வளர்ந்துலவு ஜோதியே
வானதாகி வரைகடந்து விளம்பி வீடடைந்ததேன்
கானமேகிக் கால்கடுக்கக் கானமும் குறைந்தபோது
பானமாகிப் பருகவைத்துப் பதியிலாடும் பரமவன் 1

73. வந்தநாளில் வளர்ந்தநாள் விழுந்தநாள்
எத்தனையோ
இந்தநாளில் அந்தநாளில் இருந்தநாள் எத்தனையோ
பந்தபாசம் சொந்ததேசம் பறந்ததும் சரிந்ததும்
நொந்துஉள்ளம் வெந்துவேண்ட வந்தனன்
பாரபரன் 2

74. உதவிக்குஓடி உதைவாங்கி உயிர்காத்த உத்தமனைப்
பதவிக்குஏகிப் பரவையைப் பறிவிட்ட பரமனை
நிதியுக்கும்ஓடி நிலைசெய்து நின்றாடும் நிமலனைப்
பதியிலேயேகிப் பதித்தநற் பாதம் பராபரமே 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75. வானகம் இருண்டது வையகம் மருண்டது
வாயகம் சுருண்டது விழியகம் உருண்டது
காதகம் அடைத்தது கலைநாசி நடந்தது
பாதகம் பறந்தது போதகம் பிறந்ததுவே. 4

76. மனமகம் எழுந்தது மதியகம் விழித்தது
இனமகம் இருந்தது இருளகம் அகன்றது
வழியகம் தெளிந்தது வலியகம் மறைந்தது
ஒழிவன ஒழிந்தன ஒளியகம் ஒளிர்ந்ததுவே. 5

77. ஒளிர்ந்தன தாரகை ஒளிர்ந்தன தண்ணொளிர்
மிளிர்ந்தன ஓவியம் மலர்ந்தது காவியம்
அலர்ந்தன காட்சியும் அணைந்தன மாட்சியும்
புலர்ந்தன புத்தெழில் புகுந்தது பதிப்பொருளே. 6

## வழியாகுதல்

78. பதிப்பொருள் ஆகியும் புதுப்பொருள் ஆகியும்
நிதிப்பொருள் ஆகியும் நதிப்பொருள் ஆகியும்
கதிப்பொருள் ஆகியே விதிப்பொருள் ஓட்டிநல்
மதிப்பொருள் சூடிய மலையவன் மாண்பிது. 1

79. மாண்பது ஆகியே மடமை நீக்கிநல்
காண்பது ஆகியே காட்சியும் ஆகிய
ஊண்பொது ஆகியே ஊணினை ஊட்டிநல்
நாணது சூட்டிய நாதாந்த நாதரே! 2

80. சர்வமும் ஆகியும் சத்தியும் ஆகியும்
சராசரம் ஆகியும் சர்பரைச் சூடியும்
சாந்தம தாகியும் சத்தியம் ஆகியும்
சத்சித் தானந்த சதாசிவம் ஆனதே. 3

81. அமைப்பை அமைத்து அண்டத்தில் ஆடியே
இமைப்பொழு தெல்லாம் இளமையில் ஊடியே
சுமைப்பொழு தெல்லாம் சுடலையில் ஆடியே
சமைத்தான் எல்லாம் சதுர்மறை ஏட்டையே. 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

82. ஏட்டையும் தூக்கியே எருதினில் ஏறிவந்து
காட்டையும் தாக்கியே கருதனில் குடிபுகுந்து
வீட்டையும் வீழ்த்தியே விளக்கொளி ஏற்றிநல்
நாட்டையும் நாட்டிய நந்திகேசன் நிலையிது. 5

83. நிலையதுவாகி நிதியதுவாகி நிழலதுவாகிய
நிமலோனே
கலையதுவாகிக் கதியது வாகிக் கழலதுவாகிய
கமலோனே
வலையதுவாகி விதியதுமாற்றி விழலதுநீக்கிய
விமலோனே
அலையதுவாகி அதிபதியாகி அழலதுவாகிய
அமரேசா 6

84. துயிலுமாகித் துகிலுமாகித் துரியமாக்கிய தலைவன்
மயிலுமாகி மனையுமாகி மதியுமாக்கிய முதல்வன்
வயலுமாகி வளவுமாகி வினையுமாக்கிய
விண்ணோன்
கயலுமாகிக் களவுமாகிக் கருவுமாக்கிய
கழலோனே. 7

85. முளையுமாகி முதியதாகி முனியுமாக்கிய மலரவன்
களையுமாகிக் குழையுமாகிக் கனியதாக்கிய கதிரவன்
விளையுமாறு வளைவுநீக்கி விடையதாக்கிய
விரதமும்
தளையுநீங்கத் தலையிலேகித் தமிழுமோதிய
தலைவனே. 8

86. எழுத்துமாகி அடுத்துஓதும் எண்ணுமாகிய
எம்பெருமான்
அழுத்தியாடும் சொல்லுமாகி அம்பலமாகிய
சொக்கேசன்
விழுத்தியாளும் பொருளுமாகி விண்ணுமாகிய
பெருமறையன்
கொழுத்திநாளும் ஜோதியாகிக் கோனுமான
ஜம்புநாதன். 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

87. ஓடமுமாகி ஒருபொருளாகி ஓடையிலேகி ஒருநாளில்
வேடமுமாகி வெளிவெளியாகி வாடையிலேகி
வளமாகிக்
கூடமுமாகிக் குவலயமாகிக் குடைபுடைசூழக்
குருநாதன்
பாடமுமாகிப் பாதமுமாகிப் படைதடைநீங்கிய
பழம்பொருளே! 10

88. நாதமுமாகி நதிகளுமாகி நாகமுமாகி நடையாகிக்
கீதமுமாகிக் கூதலுமாகிக் காதலுமான கதையாகிப்
போதமுமாகிப் பொதுமையுமாகிப் பதுமையுமாகிப்
புதிதாகி
வேதமுமாகி வாதமுமாகி வளர்ஒளியே விமலேசன். 11

89. பிந்துவுமாகி நந்தியுமாகிப் பந்தமுமான பரமேசன்
சந்தையிலாடிச் சிந்தையிலோடிச் சந்தியிலூடும்
சிவநேசன்
அந்தரவானில் எந்தையோடாடி அந்தியுமான
அழகேசன்
முந்தையநாளில் மந்திரமாகித் தந்தையுமான
முனியோனே. 12

90. சுந்தரமாகிச் சுத்தமுமான சந்திரசேகர
சரஸ்வதிதான்
சங்கையுமாகிச் சத்தியுமாகிச் சர்வமுமான சங்கரராம்
நங்கையோடாடி நாடியோடாடி நாவிலுமாடும்
நடராசர்
பங்கையமாகிப் புங்கையமேகிய பாதாளேஎம்
பராபரம். 13

91. ஆனந்தமாகி ஆறந்தமேகி ஆலந்தானுண்ட
ஆலகாலன்
தானந்தமாகித் தத்துவமாகித் தற்பரமான
தவமூர்த்திம்
ஏழந்தமேகி எழுகடல்நீக்கி ஏலந்தானேசும்
ஏகயோகன்
ஆழந்தான்காட்டி அறிவொளியூட்டிய அண்ணலே
அண்ணாமலைவாசா. 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

92. அந்தியுமாகி இரவியுமாகி அத்தனுமாகி இடமாகி
இந்திரனோடும் சந்திரனோடும் தந்திரமான
தொடர்பாகி
நந்தியிலேகி நரமுனியாகி நடைதுணையாகி நவமாகிக்
கந்தையுமாகிக் கனிவுடனேகிய கருணையேஎம்
காசிநாதா. 15

93. கூடுதலாகிப் பிரிதலுமாகிக் கெடுதலுமாகிப் பரிவாகிக்
காடுதலேகிக் கடுந்தவமாகிக் கனிவுடனேகிக்
கனியாகிப்
பாடுதலாகிப் படையுடனேகிப் பலவொடுகூடப்
பதமாகி
ஆடுதலாகி அலைகடலாடி அறைவானேஎம்
அயோத்தியன். 16

94. இடியிடியாகி இருவருமாகி இலயமுமாகி இருக்காகி
நொடிநொடியேகி நுதலொடுகூடி நிலயமுமாகி
நுகமாகி
அடிமுடிதேடி இருவருமாய்ய அழலதுவாகி இயல்பாகி
படிபடியேறிப் புகவழிகாட்டிப் பரமனுமான
பொருளாமே. 17

95. நரைதிரைநீக்கி நகலொடுஏகி நிகளமுமாகி நயமாகி
நிரைநிரையாக நிருதனுமாகி நிருபமுமாகி நடமாடி
வரைதனிலேற வழிதுணையாகி விரைவினிலேகி
விளக்காகி
சிகையினிலேகிச் சிரசினிலாடிச் சிவமயமாகிய
சிதம்பரமே. 18

96. சிற்றம்பலமும் பேரம்பலமும் சிந்தையேகிப்
பொருளாகிக்
கற்றபலமும் கருதும்நிலையும் கூடஓட்டிக் குறைநீக்கி
உற்ற பலமும் உறவின்நிலையும் உடனேநீங்க
உறைவாகி
நற்ற பலமும் நல்கிநாடி நின்றானே நிதானந்தன். 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

97. புத்தம் புதிய புஷ்பமாகிப் புகலிடமேகிப் புதிராகி
நித்தம் நிதியம் நிர்விகமாகி நிடைநிலைகூடி
நிழலாகிச்
சுத்தம் சுழலச் சர்வகமாகிச் சதிர் பல ஆடிச் சுகமாகி
அத்தன்அமரும் அருட்கூட்டில் அமர்ந்தேன் அன்றே
ஐயகோ! 20

98. ஐயகோஎன் அமரத்துவம் அறிவிக்க ஆடிநாளும்
மெய்யதோஎன் முடைதூக்கி மிளிர்விக்க முனைந்து
நாளும்
பையவேஎன் 'பவ'வினையைப் பிழிவிக்கப்
பரவிநாளும்
தையலோடுதான் கூடினான் தயாபரன்
தரிசனமே. 21

99. தரிசனம்காட்டித் தமிழ்ஊட்டித் தவித்தபோது
தரணிவந்து
பொதுசனம்காட்டிப் பொறைஊட்டிப் பெருமை
நீக்கிப் புரவிவந்து
அதுவிதுகாட்டி அருள்ஊட்டி அகந்தைநீங்க
அரணமைத்து
அதுவிதமாய் ஆடினானவன் ஆனந்தமோன
நடனமே. 22

100. முருகனுமாகிக் கணபதியாகி முதலதுவாகிய
குருநாதன்
திருமகளாகி மாலவனாகிய திகளொளியே
முழுமுதலன்
'திரு'அருளாகி அம்மையுமாகி திருவுருவேஎம்
அருவுருவன்
திருநடநாதன் திருவொருவூரில் தருவானேதன்
திருவருளை. 23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## III பொதுமை

101. அண்டம் அநாதி அமைப்பும் அநாதி
அண்டம் அகன்றே அகன்றே அசையும்
அண்டப் பெருக்கில் அம்பலம் பெருகும்
அண்ட நிலையில் அதிசயம் நிறைய.

102. அண்டத்தினோ ரமைப்பில் அறுகோடி விண்மீன்
அண்டத்தினோ ரமைப்பில் அளவிறந்த ஞாயிறு
அண்டத்தினோ ரமைப்பில் அளவிறந்த ஆட்டம்
அண்டத்தினோ ரமைப்பை அகலிடத்தி லறிவோம்.

103. எண்ணற்ற ஜீவணு உடலொன்றி லுண்டு
எண்ணற்ற உடலோ உலகொன்றி லுண்டு
எண்ணற்ற உலகோ ஓரண்டத்தி லுண்டு
எண்ணற்ற அண்டம் எண்ணிலி கோடியே.

104. பிரபஞ்சப் படைப்பு பரந்த வெளியது
பிரபஞ்சச் சிறப்பு வேற்றுமை யற்றது
பிரபஞ்ச இயல்பு கலப்பறு காட்சி
பிரபஞ்ச உருவம் ஒரேமூல சக்தி,

105. பொருளைப் பகுப்பில் குணங்களின் தொகையே
மருளும் குணங்கள் புலன்களின் வெளிப்பாடு
அருமும் புலன்கள் மனதினி னசைவாம்
வெருளும் மனமே விகார காரணன்.

106. சத்தியும் பொருளும் மனதின் சிருஷ்டி
சுத்தித் திரியும் அண்டமும் அஃதே
புத்தியி லாடும் அணுவும் அஃதே
மத்தியை விலகில் அனைத்தும் விகாரமே.

107. மனவிகாரம் நீங்கில் மண்டலம் இல்லை
மனவிகாரம் நீங்கில் அண்டமும் இல்லை
மனவிகாரம் மிளிர்வே அனைத்துக்கு முருவம்
மனமோ இறப்பி லனைத்து மருவமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

108. மனமோ இன்றேல் பரந்த வெளியிலை
மனமோ இன்றேல் தெரிந்த காலமிலை
மனமோ இன்றேல் மண்விண் இலையே
மனமோ இறப்பி லனைத்தும் சூனியம்.

109. சுதந்திரம் தனிமை பரந்த வெளிக்கிலை
சுதந்திரம் தனிமை காலத்திற் கில்லையாம்
சுதந்திரம் தனிமை மனதிற் கில்லையாம்
சுதந்திரத் தனிமையே சுத்தசு கானந்தம்

110. மனவுணர் வுக்கப்பால் இயற்கையி னொழுங்கு
மனவுணர் வுக்கப்பால் இயற்கையி னமைப்பு
மனவுணர் வுக்கப்பால் இயற்கையின் செயல்கள்
மனவுணர் விறப்பில் மங்கள சொருபமே.

111. மனவுணர் வுக்கப்பால் மந்திர மில்லை
மனவுணர் வுக்கப்பால் தந்திர மில்லை
மனவுணர் வுக்கப்பால் முனிவரின் கூட்டம்
மனவுணர் விறப்பில் மோன சமாதியே.

112. சத்தியும் பொருளும் ஒன்றெனப் பேசில்
சத்திதான் எங்கும் பொருளாக மிளிரும்
சித்தமில் பொருளே சத்தியாய் ஒளிரில்
சத்தியும் பொருளும் வேறில்லைத் தானே.

113. அணுக்கள் எல்லாம் சத்தியின் சிருஷ்டி
அணுக்கள் அசைவு அவனின் செய்கை
அணுக்கள் சேர்ந்து பொருளாதல் போலே
அன்பு மலர்ந்து சிவமாகு மாமே.

114. அணுவுக்குட் சூரிய மண்டலம் காணலாம்
அணுவுக்குட் பாரிய அண்டமும் காணலாம்
அணுவுக்குட் சிறிய செய்கையே காணலாம்
அணுவின் அமைப்பே அண்டத்தி னமைப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115. ஒருபானை சோற்றுக்கு ஒருசோறு பதம்போல்
ஒருஅண்ட அமைப்பிற்கு ஒருஅணு தெளிவாம்
ஒருஞானி நோக்குப் பூரணத்தி லொன்று
சிவமாம் என்றும் பரிபூர ணத்துவம்.

116. ஒருபொருட் சிதைவில் அணுக்கள் வெளிப்படில்
ஒருஅணுச் சிதைவில் சக்தியே வெளிப்படும்
பெருசக்தி திரளில் அணுக்க ளொருப்படில்
பலஅணு சேரில் பொருளுரு வாகும்.

117. பொருளி னடிப்படை பகுத்தே அறியில்
பெருசக்தி யடிப்படை தொகுத்தே புரியும்
பொருள் சக்திமூலம் இயற்கையு மாகில்
பொருள் சக்திமூலம் சிவமெனு முணர்வே.

118. இயக்கம் என்றும் சார்பு நிலைப்பாடு
மயக்கம் என்றும் மனப் புலப்பாடு
பெருக்கம் என்றும் சக்திச் செயற்பாடு
சுருக்கமே என்றும் சிவானந்த நிலையே.

119. பரவெளியோ இருண்டே விரிந்தே இருக்கப்
பரவெளியுட் பல்கோடி பிரபஞ்ச உலாக்கள்
சிரவெளியுட் சிவானந்த சிவநிலை சிறக்கத்
(ஸ்)திரஒளியுட் சிவஞான தத்துவ சித்தியாம்.

120. பிரபஞ்ச அமைப்புப் புறநீளும் கோளமாய்ப்
பிரபஞ்ச நிலையும் தினந்தோறும் வளருமே
பரஞான அமைப்பு லிங்கமாய் அங்கே
பரஞானி நிலையிற் பரஒளி வீசுமே.

121. திடுமெனப் பேரணு தகித்துக் கொதித்துத்
திடுமெனப் பிரிந்து அணுவாகி அண்டமாம்
திடுமெனப் பேரொளி திரண்டே உட்புகக்
குடுகுடு யோகி குவலயத்து ஞானியாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

122. பெருக்க மாகும் பிரபஞ்ச மென்றோ
சுருக்க மாவது சுத்தமும் நிச்சயம்
அருட்கண் ஆணையில் அலர்ந்த வோர்ஞானி
திருக்கண் திறந்து திகழ்வது நிச்சயம்.

123. சத்திபய னற்றால் ஒலியிலை யொளியிலை
சத்திபய னற்றால் வாழ்விலை வளமிலை
சத்திபய னற்றால் பிரபஞ்ச மமைதி
அநித்ய இயக்கக் காலமும் முடிவே.

124. சுருக்கம் ஏற்படில் வெப்பம் அதிகமாம்
சுருக்கம் ஏற்படில் தாரகை ஒளிருமாம்
சுருக்கம் ஏற்படில் சித்தம் ஒடுங்குமாம்
உருக்கமும் சேரில் ஞானவொளி வீசுமே.

125. பிரபஞ்ச மாயை உணர்தல் அனுபவம்
பிரபஞ்ச மாயை உணர்தல் அற்புதம்
பிரபஞ்ச மாயை உணர்தல் அழகதே
பிரபஞ்ச மாயை அறிவின் முடிபே.

126. உண்மை அனுபவம் ஒருவர் காட்சி
உண்மை அற்புதம் கன்றுக்கு மாகும்
உண்மை அழகு நன்றுக்கு மாகில்
உண்மை முடிபே முடிந்த முடிபு.

127. ஒழுங்கைக் காணில் இயற்கையின் கோட்டம்
ஒழுங்கைப் பேணில் இயற்கையின் தேட்டம்
ஒழுங்கோ வீணில் இயற்கையின் ஒட்டம்
ஒழுங்கு இயற்கை ஒருமையின் உண்மை.

128. பிரபஞ்சம் கூறில் பரவெளி ஒன்று
பிரபஞ்சம் கூறில் காலம் இரண்டு
பிரபஞ்சம் கூறில் பொருட்சத்தி நாலு
பிரபஞ்சம் கூறில் விசையொடு ஐந்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

129. புலனது அடங்கிற் பலனோ இருக்கும்
புலனது இறக்கில் நலமோ இருக்கும்
புலனது அடக்கில் மலமோ அழியா
புலனது உணரில் முளை விடுமாமே.

130. அநுபவ மிருந்தால் வருவது உருவம்
அநுபவத் தப்பால் உண்மைத் தெளிவு
அநுபவத்து விளைவே பிரபஞ்சத் தோற்றம்
அநுபவம் கடந்தால் உண்மை உணர்வே.

131. உண்மை உணர்வை நெருங்க நெருங்க
உண்மை உணர்வை உரைக்க முடியா
உண்மை உணர்வில் அநுபவம் இறக்கும்
உண்மை உணர்வே பரிபூர ணத்துவம்.

132. நித்திய நிரந்தர நிலையை நாடில்
சத்தியம் தானே சாதுவாய்த் தொடரும்
நித்தியம் சத்தியம் நிரந்தர முணரில்
நித்தியா னந்த நிலையாக லாமே.

133. புறத்தோற் றத்திலே பெரியோர் மயங்கார்
அறத்தோற் றத்திலே பெரியோர் திளைப்பர்
அறத்தோற் றத்தை அகத்தில் உணரில்
அறத்தோற் றம்தான் புறத்தே புலரும்.

134. நிறமற்ற தொன்று புலனுக் கப்பால்
உருவற்ற தொன்று உறவுக் கப்பால்
தெருவற்ற தொன்று தெளிவுக் கப்பால்
திருவுற்ற செய்தி திகைத் திருந்தேனே.

135. அகண்டதோர் வெளியில் ஆதித்த னுறைவு
நிகண்டதோ இல்லை நிமலனார் வீட்டில்
அகண்டதோர் வெளியில் அமைதியி னாதிக்கம்
அகண்ட நிகண்டு அம்பலத்தி லாடுமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

136. அறிவின் முடிவின் எல்லை காணில்
அறிவின் முடிவிற் புலனும் முடியும்
அறிவின் முடிவில் வேறுவேறு ஒன்றொன்று
அறிவின் முடிவில் ஞானம் உதிப்பே.

137. இல்லாத தொன்றிருந் திருப்பது தோன்றில்
அல்லாத நிலையினை யிருப்பது அடையும்
சொல்லாத வகையினைச் சோதியது விளம்பில்
பொல்லாத இருநிலை பொதியது நீங்குமே.

138. அண்டத்தி லுள்ளதே அவனியி லுள்ளது
அண்டத்தி லுள்ளதே அணுவிலு முள்ளது
அண்டத்தி லுள்ளதே அகலிட முள்ளது.
அண்டத்தி னமைப்புப் பிண்டத்தி னமைப்பே.

139. துகள் பறந்து அண்ட மானது
துகள் இருந்து பிண்ட மானது
துகள் எழுந்து உள்ள மானது
துகளின் தூய்மை துடைக்க வல்லார்க்கே.

140. இறை ஆணையா லுருவும் வந்தபின்
இறை ஆணையா லருவும் ஆனது
இறை ஆணையா லுருவரு ஆகிப்பின்
மறை ஞானஞானி மலர்ந்தது வையகம்.

141. இறையாணை யொன்று சத்திகூடச் சதிராடி
இறையாணை யொன்று சித்தமாகிச் சிரசேகி
இறையாணை யொன்று சப்த்தமாகிச் சதுராகி
மறையான ஞான குருஞான திருவே.

142. அண்டத்து அசைவே அண்ட சராசரம்
அண்ட சராசரம் கண்கொள்ளாக் காட்சி
அண்டத்து ளாடி அவனிமுழுது மாடிப்
பிண்டத்தி லாடிக் குடிபுகும் பித்தனே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

143. சத்தியம் என்றும் சாந்த சொரூபம்
நித்தியம் என்றும் அனந்த சொரூபம்
பத்தியம் காத்துப் பார்த்தகத் திருப்பில்
சத்தியாம் நித்தியம் சத்திய நிலையே

144. தூங்காமற் தூங்கிச் சுகம்காணும் துறவிக்குத்
தாங்காமற் தூக்கும் சுமைகாணு மேதுக்கு
வேங்கை விசையோடு விளையாட உயிரில்
பாங்காய்ப் பரமன் பதுமையாய் இருந்தான்.

145. பஞ்சப் புலனும் படமெடுத் தாடினும்
அஞ்சும் கலந்தே நடனத்தா ராடினும்
விஞ்சு புகழும் விமலனார் கழலடி
தஞ்ச மென்றே தூங்குவர் துறவியர்.

146. பத்தரை மாற்றுப் பசும்பொன்னைப் புடம்போட்டு
முத்திரை கூட்டி முகம்காட்டிக் கலையூட்டி
நித்திரை நீக்க நடைபோட்டு நகல்வரச்
சித்திரை சிறக்க வந்தனன் வையகம்.

147. மனமொன்று மதம்கொண்டு மாளிகையில் வெளிவந்து
இனமொன்று இதம்கண்டு இடர்பட்டு இகமாச்சு
கனம்பண்ணிக் கருத்தோடு கழலையே தொழுவார்க்கு
சினம்நீங்கக் குடிகொள்வான் சங்கர குருநாதன்.

148. தேடித் திரிந்து தெருவெலா மலறி
வாடி வதங்கிலும் வாரா னெம்மிறை
நாடி யுள்ளே நயம்படக் கருத்துறில்
கோடி செல்வமாய்க் கொலு விருந்தானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

149. இலைதேடி மலர்கொய்து இருவினைகள் தடைநீங்க
அலைநாடி நீர்அள்ளி அவனியிலே நடைபோட்டுக்
கலைஆடிக் கவினான கழல்சூடக் குடைவிட்டுத்
தலையேகிச் சிலையானான் திருவண்ணா
மலைவாசன்.

150. ஓதம் ஒலிக்க ஓங்காரம் ஒருப்பட
வேதம் இசைக்க வேதியன் மூளைவிட
கீதம் இனிக்கக் கீழ்வானம் வெளிப்பட
நாத அதிர்வி லாடினான் நடேசனே.

## ஆளுமை

151. ஆளுமை யென்பது ஆதிக்க மல்ல
ஆளுமை யென்பது அறிவு மல்ல
ஆளுமை யென்பது ஆற்றலு மல்ல
ஆளுமை தன்னை உணரும் தன்மையே.

152. ஆளுமை யென்பது பாரம்பரிய மன்று
ஆளுமை யென்பது அநுபவஇயல் பன்று
ஆளுமை யென்பது சூழ்நிலைச்சத்தி யன்று
ஆளுமை தானே மலர்வது தானே.

153. ஆளுமை நல்ல மனச்செய லன்று
ஆளுமை நனவிலி மனச்செய லன்று
ஆளுமை அயர்வு மனச்செய லன்று
ஆளுமை யென்றும் ஆத்மார்த்த மாமே.

154. ஆளுமை உள்ளம் உடல் சார்பன்று
ஆளுமை காமம் பண்பு சார்பன்று
ஆளுமை பற்றுத் தன்மதி சார்பன்று
ஆளுமை சார்பிலா அன்பினை உடைத்தே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

155. கால மெல்லாம் கடவுளைத் தொழுவென
ஞாலத் துதித்த ஞானியர் புகன்றனர்
ஆலம் விழுது அவனியில் வேரூன்ற
பாலம் சமைத்தா னால்கீழ் அமர்ந்தே.

156. வாய்மைச் செல்வம் வாழ்விற் பெரிதென
ஆய்ந்தே யுரைத்து அமர்ந் திருந்தார்
மேய்ந்து திரியும் மனமாடு மாயில்
பாய்ந்து உள்ளம் பொருந்தி நின்றானே.

157. தூய்மை வாழ்வின் துகிலெனப் பாடிச்
சேய்மை கடந்தே செய்தி கூறுவர்
ஓய்ந்த மனத்து ஓர்மை மாழில்
காய்ந்த சுள்ளியிற் கனற் சுடராமே.

158. ஞானக் கல்வியே ஞாலத்தில் மேற்கல்வி
ஞானச் செல்வமே ஞாலத்தில் மேற்செல்வம்
ஞானச் செய்கையே ஞாலத்தில் மேற்செய்கை
ஞான வாழ்வே ஞாலத்தில் மேல்வாழ்வு.

159. ஒழுக்கம் உயிருக்கு ஒப்புயர் ஊட்டும்
பழக்கம் பயிருக்குப் பார்வை பகரும்
ஒழுக்கம் பழக்கம் ஒன்றாகிற் பண்பு
வழக்கமா மென்றே உடலுயி ரொன்றாகும்.

160. இறைவர்க்குப் பிரியம் அஹிம்சை மலர்
இறைவர்க்குப் பிரியம் புலனற்ற மலர்
இறைவர்க்குப் பிரியம் தயையெனும் மலர்
இறைவர்க்குப் பிரியம் பொறுமையாம் மலரே.

161. இறைவர்க்குப் பிரியம் சாந்தியாம் மலர்
இறைவர்க்குப் பிரியம் தவமாம் மலர்
இறைவர்க்குப் பிரியம் தியான மலர்
இறைவர்க்கு அன்பும் சத்யம் மலரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறப்பு

162. என்பு உருகி எருமலம் அழிவித்து
அன்பு பெருகி ஆறாய்ப் பாய்ந்து
நன்மா நிலத்து நாடியே நாளும்
இன்பு பயிரிடப் பூத்தோர் பழமாச்சு.

163. பப்பாவில் ஏத்திப் பழமாயச் சொல்லச்
சுப்பரும் தாவியே ஏறிவிழு மாப்போல்
ஒப்பாரும் மிக்காரும் இல்லாதன புகழ்த்
தப்பாமற் றடுக்கித் தரணியில் வந்தனர்.

164. எழுபிறப் பென்பது முள்ளே யுண்டு
எழுகட லென்பது முள்ளே யுண்டு
எழுவண்ட மென்பது முள்ளே யுண்டு
எழுநிலை தாண்டி எழுந்து நின்றாரே.

165. மனசஞ் சாரம் லிங்கத்திற் சாரில்
மனசஞ் சாரம் புந்தியிற் சாரில்
மனசஞ் சாரம் குய்யம் சாரில்
இனவகை மூன்றும் மண்ணிற் பிறப்புகள்.

166. மனசஞ் சாரம் இதயத்திற் சாரில்
மனசஞ் சாரம் கண்டத்திற் சாரில்
மனசஞ் சாரம் புருவநடு சாரில்
இனவகை மூன்றும் வானிற் பிறப்புகள்.

167. மனசஞ் சாரம் உச்சியிற் சாரில்
தினமும் திகைப்பும் திருநடக் கூத்தாம்
மனசஞ் சாரம் உச்சியைத் தாண்டில்
சனமே யில்லா விண்ணிலை யாமே.

168. மண்ணும் வானும் விண்ணும் சேர்த்தே
எண்ணி எழுதி எடுத்த உடம்பு
திண்ணிய ஏழும் தாண்டி லென்றும்
நண்ணுவ ரீசன் நடன சொரூபை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

169. மண்ணில் மூன்று மாய்ந்திருப் போர்க்கே
வானில் மூன்று விழித்தெழுந் தோர்க்கே
விண்ணில் ஒன்று விமலனின் அழைப்பிதைக்
கண்ணிற் காணாக் கண்ணிற் கண்டாரே

170. காடு ஏகிக் கடுந்தவம் புரியினும்
நாடு நீங்கி நதிபல ஆடினும்
ஓடு ஏந்தி ஒருநிலை ஏறினும்
வீடு பேற்றை விளக்க வொண்ணாதே.

171. விண்ணிலை ஏறிநல் வியநீர் உலகத்துப்
பெண்ணிலை யாகிய பொருளினைக் கூறிடில்
கண்மணி கலந்து கருவுட் குடைந்து
எண்ணள வில்லா எழுத்தே ஆன்மா.

172 ஆன்மா நல்ல அருந்தவப் புதல்வி
ஆன்மா நல்ல அழகொளி தேவி
ஆன்மா நல்ல அறிவளர் ஜோதி
ஆன்மா என்று மானந்த சொரூபே.

173. சொரூபு உணரில் சோதிநிலை தாண்டுவர்
சொரூபு உணரில் சப்தநிலை தாண்டுவர்
சொரூபு உணரில் நாதநிலை தாண்டுவர்
சொரூபு உணரில் அமிர்தநிலை தாண்டுவரே.

174. தாண்டுவோர் தாண்டில் தனிநிலை அடைவர்
தாண்டுவோர் தாண்டில் தனிவெளி காண்பர்
தாண்டுவோர் தாண்டில் முதலாம் நிலையில்
யாண்டு மிருப்பர் முழுமுத லோடே.

## அன்பு

175. அன்பே ஆனந்த மௌன சொரூபம்
அன்பே ஆனந்த ஞானச் சுடர்
அன்பே ஆனந்தப் பேரின்ப ஊற்று
அன்பே ஆனந்த மானந்த மாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

176. அன்புதான் இன்பம் அன்புதான் செல்வம்
அன்புதான் வாழ்வு அன்புதான் வளர்வு
அன்புதான் கல்வி அன்புதான் கலவி
அன்புதான் காட்சி அன்புதான் மாட்சியே.

177 அன்புதான் அருவம் அன்புதான் உருவம்
அன்புதான் ஜீவன் அன்புதான் ஜோதிர்
அன்புதான் சுற்றம் அன்புதான் சுகம்
அன்புதான் மூலம் அன்புதான் முக்தியே.

178. அன்பே ஒழுக்கம் அன்பே ஓடுக்கம்
அன்பே அழகு அன்பே அறிவு
அன்பே அறம் அன்பே திறம்
அன்பே இதயம் அன்பே விடுதலை.

179. அன்பே அகம் அன்பே புறம்
அன்பே தாய் அன்பே தந்தை
அன்பே தயவு அன்பே தாட்சண்யம்
அன்பே ஈனம் அன்பே இரக்கமே.

180. அன்பே இகம் அன்பே பரம்
அன்பே இனம் அன்பே இடம்
அன்பே மொழி அன்பே மதம்
அன்பே எல்லாம் அன்பே எங்கும்.

181. அன்பே சிவம் அன்பே சத்தி
அன்பே சத்யம் அன்பே சாந்தம்
அன்பே ஏகம் அன்பே அநேகம்
அன்பே சத்சித் ஆனந்த சொரூபு.

## எழுத்து

182. எழுத்தே ஆதியென ஏடோர் புகல்வர்
எழுத்தே அந்தம் என்பதும் அறிவோர்
எழுத்தே ஒன்று எல்லா நிலைக்கும்
எழுத்தி லிருந்தே எழுந்தன எல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

183. எழுத் தெனப்படுவது சப்த சொரூபம்
எழுத் தெனப்படுவது நாத சொரூபம்
எழுத் தெனப்படுவது அதிர்வு சொரூபம்
எழுத் தினைக்கூறில் 'அகரம்' ஆகும்.

184. அகர நிலையே அனைத்துக்கும் முதலாம்
அகர நிலையே அனைத்தாதா ரமும்
அகரம் கூறில் அன்புதான் மலரும்
அகரம் உணரில் இறைவன் உறைவே.

185. இயங்காப் பொருளில் அகர முண்டு
இயங்கு பொருளில் அகர முண்டு
இயங்கு நிலையைத் தன்னில் உணரில்
இயங்கா இயக்கம் அகரம தாமே.

186. அகரத்தி னுள்ளே ஐந்த எழுத்து
அகரத்தி னுள்ளே ஐந்து பேர்
அகரத்தி னுள்ளே ஐந்து பொருள்
அகரத்தி னுள்ளே அமர்ந் திருந்தரே.

187. அகர அதிர்வில் ஆதித்தன் தோற்றம்
அகர அதிர்வில் ஆலய வடிவம்
அகர அதிர்வில் அண்ட சராசரம்
அகர அதிர்வே ஆன்ம சொரூபம்.

188. அகரத் திருந்து ஓசை பிறக்கும்
அகரத் திருந்து ஒலிகள் பிறக்கும்
அகரத் திருந்து நாதம் உதிக்கும்
அகரத் திருந்தே விந்து வெளிப்படும்.

189. அகரம் விதையாகில் உகரம் மரமாகும்
அகரம் சிவமாகில் உகரம் சத்தியாம்
அகரம் அருவாகில் உகரம் உருவாகும்
அகர உகரம் அருவுரு வாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

190. ஓங்காரத் திருப்பிடம் அகர மாகும்
சங்காரத் திருப்புடம் அகர மாகும்
ஐங்கர னிருப்பிடம் அகர மாகும்
பொங்கும் பூங்கழல் அகர மாமே.

191. போதுமய்யா என்தன் பண்ணிய செயல்கள்
போதுமய்யா என்தன் எண்ணிய நிலைகள்
போதுமய்யா என்தன் கண்ணின் பார்வை
தாருமய்யா உன்தன் தாண்டவ சொரூபை.

192. தாண்டவ சொரூபின் தண்ணிலை சூட்ட
மாண்ட மனத்தில் மாணிக்க மேற்ற
ஆண்டு என்னை அரவணைத் தெடுத்து
மீண்டு மென்னை மிளிர்வித் தானே.

193. மிளிர்வித்து மனைவித்து மலைமடு காட்டி
ஒளிர்வித்துப் பிணைவித்து அலைகடல் தாண்டி
அளிர்வித்துச் சுனைவித்தில் கலைஅலை பூட்டி
வெளிர்வித்தில் தனைவித்தை வலைவலையாய்
வெளிவிட்டான்.

194. வெளிவிட்டுப் பின்னும் வெண்கலத்து நிலைகாட்ட
வளிவிட்டு இன்னும் வெண்மை வகையாக்க
வழிவிட்டு நாளும் வந்தனத்தை வித்திட்டுக்
கழிகொண்டு கருவிட்டுக் குழிவிட்டே குதித்தேனே.

195. குதித்தேன் அந்தக் குஞ்சித பாதத்தில்
மிதித்தேன் இந்த மனத்தக மாயையை
மதித்தேன் அந்த மந்திர சொரூபனைத்
துதித்தேன் விழித்துத் தூங்கியே நாளும்

196. நாளைப் பார்த்து நடை தளர்வேன்
கோளைப் பார்த்துக் குடை சரிவேன்
ஊழை யெண்ணி உடை உறவேன்
சூழை மூட்டிச் சிவகூழை உண்ணில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

197. உண்ணில் உணர்வே உயிர் பெற்றோர்
கண்ணில் மலர்வே கதிர் வீச்சும்
மண்ணிற் தவமே மாண்புத் தொட்டில்
விண்ணில் அமர்வு வளர் விளையாட்டு.

198. விளையாடி விதைபோட்டு விடுவிக்க வினையேற்றுக்
களையாடிக் கதைகேட்டுக் கடுகென்று கவிபாடி
முளையோடி மழைநாளில் மதியோடு முதலாகி
வளைபோட்டு இதயத்தில் விளக்கான இறையே.

199. இறையே 'இல்லாத ஒன்றின்' இருப்பிடம்
இறையே 'உள்ளத னிரண்டிற்கு' முளவாகும்
மறையே இறையே மண்ணிடை வெளிச்சம்
பொறையே இன்றும் என்றும் பொதுமை.

200. பொதுமை யென்பது பெரியோர் வாக்கு
பொதுமை சமரசப் பழைய சன்மார்க்கம்
பொதுமை பேணில் பதுமை யாகும்.
பொதுமை யென்றும் புதுமை யாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IV. வேத நிலை.

201. வேத பாடம் வாத மின்றிப்
போக மாகப் பாக மாதர்
தாக நீங்கத் தூப மாகி
யோக மாகி யாக மாச்சு.

202. வேத தாகப் போத போகம்
காத தேகிக் காவ லோடு
கீத மாகக் காத மேகி
நாத மேத நூத மாச்சு.

203. வேத வோசை வேண்டி நாளும்
ஆத முள்ள மாவ லோடு
ஈத மாகி ஈர மாகிப்
பாத பூசை பாச மாச்சு.

204. வேத மோத வேறு வேறாய்
பூத மாழப் புவியி லேகிச்
சாத மோடு சோர்வு மாய
மாத யாக மோத மாச்சு.

205. வேத மேட்டி லென்று மில்லை
வேதம் நாட்டி லின்று மில்லை
வேதம் காட்டி லங்கு மில்லை
வேத வீட்டை உணர வாரீர்.

206. வேத காலம் விளம்ப லாகா
வேத வோசை குழம்ப லாகா
வேத பூசை தழம்ப லாகா
வேத மோது மழலை மூட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

207. வேத மென்பது சப்த ரூபம்
வேத மென்பது ஜோதி ரூபம்
வேத ஓசை ஒலியு ரூபம்
வேத கீதம் ஸ்மிருதி யாமே.

208. விழித் திருந்து விண்ணை நோக்கில்
வெளித் தெருவிற் கண்ணு காணில்
அளித் தெழுந்து அன்பு பூணில்
ஓளிர்த்த கீத வேதம் கேட்கும்.

209. அஞ்சு நாளில் அஞ்ச கத்தை
நெஞ்சு மேழின் நெறிய கத்தை
துஞ்ச மாக்கித் தூங்க வல்லோர்
குஞ்சு ரத்தில் கேட்பர் வேதம்.

210. பட்டு ஆடை பட்ச ணங்கள்
பொட்டு மாலை பூச்ச ரங்கள்
தட்டு பாக்குத் தாம்பு லங்கள்
விட்டு நீங்கில் வேதம் கேட்கும்.

211. வேதாந்தம் வேண்டி வேட்கை விட்டார்கள்
வேதாந்தம் காத்து வெண்மை பூத்தார்கள்
வேதாந்தம் தேடி விரதம் பூணவே
வேதாந்த வரைபை வகுத்தான் வியாசனே.

212. வேதாந்த மெல்லா வேதியர்க்கு மாகும்
வேதாந்த மெல்லா நாதியர்க்கு மாகும்
வேதாந்த மெல்லாச் சாதியர்க்கு மாகும்
வேதாந்த மெல்லாக் காவியர்க்கு மாமே.

213. வேதமோதத் தகுந்தவன் வெள்ளை யுள்ளத்தவன்
வேதம்கேட்கத் தகுந்தவன் வெறுமை யுள்ளத்தவன்
வேதமாகத் தகுந்தவன் வெண்மைநீ றணிந்தவன்
வேதமாகி வருபவன் வெள்ளிமா மலையுளானே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

214. வேதம் நாலு வென்று நாடி
நாதம் காலு நாலு வாகக்
கீத மாகக் கோல்க ளூன்றிப்
பாதமே பதிப்பவன் பண்டுநா ளிருப்பவன்.

215. இருக்கு வென்று இளமை யூட்டிச்
செருக்க தென்று செக்கி லேற்றிக்
கருக் குளே கழலை யூன்றித்
திருகிய திருவினன் திகழுமா மலையுளான்.

216. யசுர தென்று யாகம் தந்து
அசுர நீக்க அரசு நாட்டி
உசிர தென்று உவகை யூட்டி
மருவினான் மனதிலே மகிழுமா மலையுளான்

217. சாமமாம் சத்தியம் சாதனை சிறந்தது
சாமகான கீதமும் சேய்தியாய்க் கிடைத்தது
பாமரர் போற்றுநல் பண்ணிசை பிறந்தது
வாமமாய் ஒளிர்பவன் வெள்ளிமா மலையுளான்.

218. அதர்வணம் அலர்ந்தது அங்கியின் அளியினால்
புதரிலே புலர்ந்தது படத்தொடு பறந்தது
கதிரிலே வளர்ந்தது கருவொடு விளைந்தது
மதியினைச் சூடினான் மகிழுமா மலையுளான்.

219. இருக்குவின் இருக்கையோ 'சர்வஜீவ' பாவனை
யசுருவின் சாரமோ 'சீவசிவ' பாவனை
சாமத்தின் சாதமோ 'சிவசீவ' பாவனை
அதர்வத்தி னங்கமோ ஆன்மவன்பு சொரூபமே.

220. இருக்குவை ஓதிடில் 'ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம'
யசுருவை ஓதிடில் 'அஹம்ப்ரஹ் மாஸ்மி'
சாமத்தைப் பாடினால் 'தத்வமஸி' யாகும்
அதர்வத்தை ஓதினால் 'அயமாத்மாப் ரஹ்ம'மே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

221. வேதவாக் கியங்கள்நீர் வேட்டிரேல் வேட்டிரும்
வேதவாக் கியங்கள்நீர் கேட்டிரேல் கேட்டிரும்
வேதவாக் கியங்களைப் போட்டதே பாட்டிலே
வேதவாக் கியங்களைப் பாவனை பண்ணிடும்.

222. வேதகாலம் கூறுவர் வகுத்தகாலக் கூறி
வேதகாலம் ஆய்ந்திடில் நாதகால மாகுமே
நாதகாலம் நல்கிடில் நாதரை நல்குவோம்
வாதமேன் வந்திடும் வந்தனை செய்குவோம்.

223. வடக்குவாசல் வீடுவேதம் வந்திருந்து கேட்கலாம்
கிழக்குவாசல் கோயில்தேவன் குன்றதேறிக்
காணலாம்
உழக்குவாங்கி உருண்டதோடி உறவதோட ஓடியே
துடக்குநீங்கத் துறவுபூண்டே தூங்கலாகும்
தொட்டிலில்.

224. முக்காலம் ஓதிவேதம் முழுமுதலை ஓம்பிநின்று
எக்காலும் காத்துநாளும் ஏகாந்தக் கழலைநாடி
சொக்காமல் சோதிகாணச் செறிவாகிச்
சென்றுநின்றால்
தக்கோலம் பூண்டுவந்து தாமரையி லேகுவானே.

225. கடலலை கரையுதழுவக் கலைவாணர் கவியதுபாட
உடலலை உணவுதழுவி உறுதியி னுயர்வதாகி
மனவலை உறவுதழுவி மதிமலர் ஊர்தியாக
உயிரலை உண்மைதேடி ஓதுமே வேதகீதம்

226. அவனியி லோடிநாளும் அடுப்பினையூதி மூட்டிக்
கவணினிற் கல்லையேற்றி அடுத்தடுத் தெய்துஎய்து
சிவநிலை காணவோடிச் சிவசிவ வேதமோத
பவனியில் வருவனாமே பார்பதி வழவர்கோனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

227. பழமொடு பூவுமேந்திப் பசியொடு பண்புகாத்து
உழவினை உழுதுநாளும் உயர்வினின் உணர்வுமாகி
பழவினை நீங்கநாளும் பதியடி நாடிநின்று
முழவினைக் கொட்டவேதம் முழுதுமாய்க்
காட்டுவானே.

228. வேதமோதி வேள்விசெய்து வேகமோடு
வெண்ணையூற்றி
நாதமோதி நோன்புசெய்து நடுவதாகி நடனமாடி
காலமோதக் கோலம்செய்து கோவதாகிக் காதலாகிப்
போதமோதிப் போகமாகிப் பாதமானான்
பரமநாதன்.

229. எண்மர்க்காக நாடதேகி நல்நிழல்கீழ் நிடையும்கூடி
மூவர்க்காக முதுபொருளை மறையதாக மலரவைத்து
இருவர்க்காக ஜோதியாகி இறைநிலையைப்
போதிவித்து
ஒருவனாகி ஏகமாகி ஓடிவந்தான் வேதமோத.

230. வேதமோதும் வேதியர்கள் வேரதாவர் வேதநூற்கு
நாதமாகும் ஞானியர்கள் நல்நிழலே ஞாலமீதில்
போதமாகும் பெரியவர்கள் புதுமலரே பூவுலகில்
பாதமாகும் பரமநாடன் பழமுமானான்
பண்டுநாளில்.

## விசாரம்

231. ஆன்மா உயிரென்று உரைத் திடாதீர்
ஆன்மாவு முயிரும் வேறு வேறே
ஆன்மா உடலுக்கு ஒன்ற தாகும்
ஆன்மா என்றும் அழியா ததாமே.

232. உயிரோ பல்கோடி உடலொன்றி லுண்டு
உயிரின் செறிவை உணர்வோ மாகில்
உயிரின் இயக்கம் உணர்வோ மாகில்
உயிரின் உறவே பிராணன் தெளி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

233. ஒருகல உருவிற்கு ஒருயிர் உண்டு
ஒருகல உருவிற்கு ஓரான்ம வுண்டு
பலகல உருவிற்குப் பல்லுயி ருண்டு
பலகல உருவிற்கு ஓரான்ம தானே.

234. ஆன்ம சொருபு உணர்வோ மாகில்
ஆன்ம சொருபு அன்ப தாகும்
ஆன்ம சொருபு உரைப்போ மாகில்
ஆன்ம சொருபு வெட்ட வெளியே!

235. ஆன்ம அன்பு உணர்வோ மாகில்
நன்மா நிலத்துச் சுகமும் வேண்டோம்.
ஆன்ம வெளியில் உலவி வந்தால்
விண்மா டத்துச் சுகமும் வேண்டோம்.

### சமம்

236. மனமோ மேய்ந்து மகிழும் நல்மாடு
தினமும் ஓய்ந்து இராது காணும்
மனதைப் பாய்ந்து அடக்கப் பார்க்கில்
மலர்வு காய்ந்து இறந்து போமே.

### சமாதானம்

237. மலர்வு காக்க வேண்டும் நாளும்
மலர்வு காப்பில் மனம் அடக்கோம்
மலர்வு மலர மனம் ஒருங்கும்
புலரும் நாளும் புதிது புதிதாய்.

### தமம்

238. புலன்க ளைந்தும் வெளியே போனால்
நலன்க ளில்லை மலர்வு மில்லை
புலன்க ளைந்தும் உள்ளே நோக்கில்
நலன்க ளுண்டு மலர்வு முண்டே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபரதி

239. புலன்கள் காத்துப் புனைந்து நாளும்
நலன்கள் நீக்கி நகர்ந்து சென்றே
பலன்கள் நீக்கிப் பரந்து போகில்
விலங்கு எல்லாம் விடுத்த வாறே.

240. விடுத்த வாறின் வகையைக் கூறில்
எடுத்த அம்பைத் தொடுத்து நாளும்
அடுத்து எய்து அடுத்து எய்யில்
உடுத்து வந்தான் உடுக்கை யோடே.

## திதிட்சை

241. வெப்பம் உணர வெருள வேண்டாம்
வெப்பம் நீங்கி ஓட வேண்டாம்
வெப்பம் தேடி ஆட வேண்டாம்
வெப்பம் தன்னுள் வகுத்த வாறே

242. வெப்பத் துள்ளே இருந்து பார்க்கில்
வெப்பத் தூடே வேதியன் வருவன்
வெப்பத் தோடு வளர்ந்து போகில்
தெப்பத் தேறித் துறைய டையும்.

243. குளிர தென்று கூட்டை மூடிக்
குளிர தென்று கனலை மூட்டிக்
குளிர தென்று கூறு நாளில்
குளிரி னுணர்வு உணர மாட்டாய்.

244. குளிரின் உணர்வு குபேரன் உணர்வு
குளிரின் ஊடே குமரி வருவள்
குளிரில் ஊடக் குமரன் வருவன்
குளிரிற் சும்மா இருந்த வாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

245. குளிரைக் கொண்டு கங்கை வந்தாள்
குளிரை மொண்டு சங்கை யானோம்
வெளியு காண வேடம் நீக்கில்
குளிரில் குமர குமரி காட்சி.

246. குளிரிற் குமர கூத்துக் கண்டு
குளிரிற் குமரி காத்து நிற்பள்
குளிரைத் தன்னுட் பேணி நின்றால்
குஞ்ச ரத்தைக் கூட்டிற் காண்போம்.

## சிரத்தை

247. வேதவி சாரத் தார்வம் பூண்டால்
நாதவி காரத் தோசை கேட்கும்
போதவி காரத் துண்மை காணில்
பாதவி காரத் தமர்ந்த வாறே.

248. மூச்செ டுத்தல் வாறு போலே
ஆச்சு தல்லோ ஆர்வம் வேண்டும்
மூச்சு நின்றால் உயிரே போச்சு
பேச்சு ஆர்வம் போன வாறே.

249. உயிர்க்குச் சுவாசம் உறுதி போலே
சிரத்தைக் கார்வம் உறுதி யாகும்
உயிரோ சுவாசம் தானே யெடுக்கும்
சிரத்தையி லார்வம் தானே மலரும்.

250. உயிரி னியக்கம் சுவாச மாகும்
உயிரி னுண்மை சுவாச மாகும்
சிரத்தையி லார்வம் இயக்க மாகும்
சிரத்தையே விசார மூல மாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிரவணம்

251. வேத வாக்கியம் வேண்டி நாளும்
பாத குருவைத் தேடி ஓடி
வேத வாக்கியப் பொருளு கேட்டல்
போத மாகும் பொருள தாமே

252. பொருளி னர்த்தம் கேட்கக் கேட்க
மருளும் இருளும் விலகி யோடும்
திருவி னருளும் உதய மாகக்
குருவி னருளால் ஞான மாமே.

### மனனம்

253. கேட்ட பொருளைச் சிந்திப்ப தாலே
கேட்ட பொருளின் தெளிவு கூடும்
கேட்ட பொருளின் வடிவு காணில்
கேட்ட பொருளே விளைவ தாகும்.

### பிரசங்கியானம் (தியானம்)

254. சிந்தித்துத் தெளிந்து சிறப்பினை உணர்ந்து
சிந்தித்துத் தெளிந்து சீரினைக் காணும்
சிந்தனை முடிவில் தெளிவு பிறப்பில்
சிந்தனை முடிபில் ஞானோ தயமே.

255. தியான மென்பது நினைத லாகும்
தியான மென்பது நினைவற நினைதல்
தியான மலரோ தன்னுள் மலரில்
தியான விளைவு திருவரு ளாமே.

256. வேதாந்தம் வறட்டு வேதாந்த மென்பர்
வேதாந்த வளமை உணர மாட்டார்
வேதாந்தம் விளக்கும் வேடதா ரிகள்
வேதாந்த மகிமை உணர்த்த மாட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

257. வேத விளக்கை வீட்டில் ஏற்றிக்
காத தூரம் கடந்தே வாரும்
வேத கீத நாத போதன்
பாத மாகிப் பரவு வானே.

258. வேத விளக்கில் வேதனை மாயும்
வேத விளக்கில் சோதனை நீங்கும்
வேத விளக்கில் வாதனை மாழும்
வேத விளக்கே போதனை யாமே.

259. வேத விளக்கின் விரிசுடர் காணில்
நாத வழக்கம் நயம்படு மாகும்
வேத விளக்கில் வெளியது காணில்
போத வகையின் பொருளது வாமே.

260. வேத ஒலிகள் கேட்க நாளும்
பாதம் நோக நடக்க வேண்டாம்
வேத ஒலிகள் எம்மிற் கேட்க
வேஷ கோஷம் நீக்கிப் பாரும்.

261. வேத போதம் உண்ண எண்ணிக்
காத தூரம் ஏக வேண்டாம்
வாதம் நீங்கி வாயை மூடப்
போத முள்ளே பொழியும் காணும்.

262. வெந்து நொந்து வேண்ட உள்ளம்
வந்து நிற்பான் வேத நாதன்
ஐந்து பேரும் அஞ்சி நிற்கக்
குந்தி நாளும் கோயில் கொள்வான்

263. பொக்கிஷத்தை விட்டுவிட்டு போகம்பண்ணப்
போனதேன்
பொக்கிஷத்தைத் தொட்டுவிட்டுத் தாகம்பண்ணப்
போனதேன்
பொக்கிஷத்தைத் தட்டிவிட்டு வேகம்எண்ணிக்
கொண்டதேன்
பொக்கிஷத்தைப் பேணப்பேணப்
பாகம்பெண்ணொ டாவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

264. குஞ்சரத்தன் குடியிருக்கக் குவலயத் தலைந்ததேன்
குஞ்சரத்தன் கொலுவிருக்கக் கோயிலு
மமைத்ததேன்
குஞ்சரத்தன் கோவிருக்கக் கோதண் டெடுத்ததேன்
குஞ்சரத்தன் அஞ்சுகத்தில் கூவிநிற்பன் குடியொடே.

265. அத்வைத நிலையில் உணர்பவ னொன்று
அத்வைத நிலையில் உணர்பொரு ளிரண்டு
அத்வைத நிலையில் உணர்வழி மூன்று
அத்வைத நிலையில் உணர்வொடு நான்கே.

266. உணர்பவ னிங்கே 'பிரமாதா' என்பர்
உணர்பொரு ளிங்கே 'விஷய' மென்பர்
உணர்பவன் உணர்பொருள் வேறாகிக் காணில்
உணர்பவன் உணர்பொருள் அஞ்ஞான மாகும்.

267. உணர்வழி இங்கே 'பிரமாண' மென்பர்
உணர்வும் இங்கே 'பிரமிதி' யென்பர்
உணர்வழித் தொடர்பு உணர்பவன் பொருளொடு
உணர்வழி 'விருத்தி' மனபரி மாணமே.

268. மனபரி மாணத்தில் உணர்விற் தெளிவு
மனபரி மாணத்தில் நான்கும் ஒன்று
மனபரி மாணத்தில் ஞானம் தோன்றில்
மனபரி மாணத்தில் ஞானியர் தோற்றமே.

269. நான்கு நிலையும் ஒராண்ம வஸ்துவில்
நான்கு நிலையும் ஓராண்ம பேதங்கள்
நான்கு நிலையும் ஒருமையி லுணரில்
நான்கும் மறைந்து ஏகம தாகுமே.

270. நான்கை உன்னி நன்கு பார்க்கில்
நான்கும் நான்கு மறைக ளாகும்
நான்கைச் சென்னி வீட்டி லேற்றில்
நான்கு மொன்றாய் நடந்த வாறே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

271. நடந்த போதும் சுருதி கேட்கும்
கிடந்த போதும் சுருதி கேட்கும்
உடந்தை யாக உயிரு ளுடில்
படர்ந்த வாறு படரு மாமே.

272. படரு நாளில் பகல னாகி
தொடரு நாளில் தேவொ டாகி
இடரு நாளில் இருமை நீக்கி
விடைய தாகும் விரிசுடர் மறையே.

273. விரிசுடர் மறையே விண்ணின் முடியே
தெரிசுடர்த் தவமே தண்ணின் தாளே
அரிஅரன் அருளே அண்ணத் தமுதே
அரகர மகாதேவ மொழியே மறையாம்

274. தேவ மொழியே தெரிவிக்கும் செய்தி
தேவ மொழியே தேட்டம தளிக்கும்
தேவ மொழியே தோட்டம தமைக்கும்
தேவ மொழிதான் தமிழது வாமே.

275. தமிழது வான தலைவனைக் காணத்
தமிழது வான அமிழ்தினை யுண்ணத்
தமிழது வான மறையினைப் பேணத்
தமிழது வான தத்துவம் காணுதும்

276. தத்துவம் கண்டு தவநிலை தளிர்ப்பட்டு
தத்துவம் கண்டு தடைநிலை அறுபட்டு
தத்துவம் மறையே தனித்தும் முழுதும்
தத்துவ வித்தில் தந்தது சிவமாம்.

277. தந்தது சிவமாம் தந்தையும் வெளிப்பட
வெந்தது மராமரம் விந்தையும் முளைப்பட
நொந்தது மராமனம் நந்தியில் மறைபட
வந்தது பராபரம் வந்தது மறையொடு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

278. மறையொடு வந்து மனமொடு மோதிப்
பிறையது சூட்டிப் பிணைவினை தீர்த்துத்
துறையது காட்டித் துயரது நீக்கி
அறைவித் தன்பால் அலர்ந்ததே நாளும்.

279. நாளும் அலர்ந்து நதிபல கடந்து
வாளும் உயர்ந்து வீரம் விளைந்து
பாழும் மனமும் படையும் பறந்து
ஆழும் குணமும் அகல மறைவரும்.

280. குணமது அகலக் குறிபல காட்டி
மணமது மலர மறையது ஓதிக்
கணமது நாளும் கவினொடு நாடிப்
பிணக்கது போக பிசைவித் ததுவே.

281. பிசைவித்துப் பிறையொடு பொறையது ஊட்டி
இசைவித்து இறையொடு இணைதுணை யாக்கி
திசைவித்துத் திருவொடு திகழவே திருமலை
அசைவித்து அசைந்தது அருமறை காணே.

282. அருமறை காண அகலிட மகன்று
திருமறை பேணத் திருவொடு பகன்று
வருமறை வாழ வழிவழி வகுத்து
ஒருமுறை ஓது ஒருபொரு ளொருநிலை.

283. ஒருபொரு ளொருநிலை ஓதியே உணரில்
ஒருபொரு ளொருநிலை ஓவியம் உணரில்
ஒருபொரு ளொருநிலை ஓசையி லுதிக்கில்
ஒருபொரு ளொருநிலை பெருமறை காணும்.

284. பெருமறை காணப் பொதியது ஏந்தி
பொதுமறை பேசப் பெரியவர் வந்து
பொதுமறை பாடும் பெருநாப் புலவர்
பெருமறை யானார் பேசவொண் ணாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

285. பேச வொண்ணாது புகல வொண்ணாது
பூச வொண்ணாது அகல வொண்ணாது
பேச வெண்ணாது புகல வொண்ணது
பூச வெண்ணாது புலருமே புதியதாய்

286. புலர்ந்து புதிதாய்ப் புகலிடம் புகுந்து
அலர்ந்து நாளும் அவனியில் நின்று
மலர்ந்து உள்ளம் மகுடம் சூட்டி
வளர்ந்து நிற்கும் வளர்மறை ஓத

287. வளர்மறை ஓதி வளைவுகள் நீக்கித்
தளிர்நடை போட்டுத் தடைபடை நீக்கித்
கிளர்ந்தெழ ஆடிக் கிளைகளைப் பரப்பி
ஒளிர்வகை யான ஓவிய உணர்வே.

288. ஓவிய உணர்வை ஒருமையி லுணர்ந்து
ஓவிய உணர்வில் ஒருநிலை யுணர்ந்து
ஓவிய உணர்வுள் ஏகமா யமர்ந்தால்
ஓவிய உணர்வே ஒண்பொரு ளாமே.

289. ஒண்பொரு ளானால் ஒன்று மில்லை
ஒண்பொரு ளாலே எல்லா முண்டு
ஒண்பொரு ளுள்ளே ஆனந்த சொரூபம்
ஒண்பொரு ளுள்ளே அமர்ந்திருந் தாரே.

290. அமர்ந்தே யிருந்து அருமறை யோதி
அமர்ந்தே யிருந்து அண்டவலம் வந்து
அமர்ந்தே யிருந்து அகலிட மளந்து
அமர்ந்தே யிருப்பில் அன்புணர் வாரே.

291. அன்ப துணர்ந்து ஆல்கீ ழமர்ந்து
அன்ப துணர ஆகம மழந்து
அன்ப துணர அருமறை யோதி
அன்ப துணர்ந்தார் அப்பனோ டானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

292. அப்பனொடு ஆகி அந்தரத் தெழுந்து
அப்பனொடு கூடி விந்தையத் தேகி
அப்பனொடு பாடி சுந்தர மணிந்து
அப்பனொடு ஆடி ஆனந்த மானார்.

293. ஆனந்த நிலையில் ஆதித்த னியக்கம்
தானந்த நிலையில் தத்துவ மயக்கம்
ஆனந்த வடிவில் அருளும் மறைகள்
ஆனந்த வடிவே சதானந்த மாமே.

294. சதானந்த மான சூக்கும முரைக்கில்
சதானந்த மான சுப்பரும் அங்கியும்
சிதானந்த மான சீவரும் சிவனும்
சிதானந்த மான சீர்மய தாமே.

295. சீர்மய தாகிச் சிசுவாகிச் சிதமாகிப்
பேர்மய மாகிப் பெரிதாகிப் பொதுவாகி
ஊர்மய மாகி உறவாகி உடலாகி
ஏர்மய மாகி எருதானதே எழுவகை.

296. எருதாகி என்றும் எழுகடல் நீந்திக்
கருவாகிக் காத்துக் கழலது சூட்டி
அருவாகி அங்கம் அழலாக வைத்துக்
குருவாகி யங்கே குவலய மானதே.

297. குவலயத் துலவிக் குடைதனு ளிருந்து
'அ'வலயத் தமர்ந்து அகவடி வமைத்து
'உ'வலயத் துயர்ந்து உயிர்நிலை ஊடி
'ஓ' வலய மான ஓசையே ஓசை.

298. ஓசையி னமைப்பே ஒலிவடி வாகி
பாசையி னொலியே ஒளிவடி வாகி
ஓசையி னொலியே நாதம தாகி
ஓசையி னொளியே விந்துவு மாமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V சித்த நிலை

301. பரமே! பழம் பொருளே! பாகா!
புரமே! எரித்த புண்ணியா! என்தன்
சிரமே புகுந்து சிறையே பிடித்த
சிவமே! இங்கு சிவமந்திர மானாய்.

302. சித்தாந்தம் சித்த சிதைவிற் சீர்பெறும்
சித்தாந்தம் சித்து செய்கை கடந்தது
சித்தாந்தம் சத்த தொனியும் கடந்தது
சித்தாந்தம் சித்தர் சிவனார் வீடே.

303. சித்தாந்தம் சிவனார் ஆகம வழிவந்து
சித்தாந்தம் சிவனார் ஆலய வழிநின்று
சித்தாந்தம் சிவனார் ஆனந்த நிலையில்
சித்தாந்தம் சிவனார் அன்பரின் வீடே.

304. சித்தாந்தம் சொல்லச் சுற்றமொடு வாரும்
சித்தாந்தம் சொல்ல முற்றுமாய்க் கேளும்
சித்தாந்தம் சொல்ல மற்றவை நீக்கும்
சித்தாந்தம் 'சொல்லின்' சிவனார் வீடே.

305. சித்தாந்த மான சுகமது காணில்
சித்தாந்த மான செகமது நாடில்
சித்தாந்த மான சிகையது ஊடில்
சித்தாந்த மானது சிவனார் வீடே.

306. சித்தாந்த மெல்லாச் சிறப்பும் உடைத்து
சித்தாந்த மெல்லாச் செல்வம் படைத்து
சித்தாந்த மெல்லாச் 'செம்மை' சிறந்து
சித்தாந்தம் தானே சிதானந்த வீடே.

307. சித்தாந்தம் சைவத்தின் சுத்த நிலையாம்
சித்தாந்தம் சைவரின் பக்தி வழியாம்
சித்தாந்தம் சித்தியில் சக்தி வகையாம்
சித்தாந்தம் சைவம் சிவனார் வீடே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

308. சித்தாந்தம் என்றும் 'முடிந்த முடிபு'
சித்தாந்தம் உண்மைத் 'தெளிந்த தெளிவு'
சித்தாந்தம் பசுவின் 'விடிந்த விடிவு'
சித்தாந்தம் சிவனார் சீரிய வீடே.

309. சித்தாந்தம் சிவனார் தேவிக் குபதேசம்
சித்தாந்தம் சிவனார் நந்திக் குபதேசம்
சித்தாந்தம் சிவனார் காலகண்டர்க் குபதேசம்
சித்தாந்தம் சிவனார் ஞாலத்து நிகழ்வே.

310. சித்தாந்தம் என்றும் ஓதப் படவில்லை
சித்தாந்தம் என்றும் உணரப் படுவதே
சித்தாந்தம் ஓதாது உணர்ந்த பெரியோர்
சித்தாந்த வீட்டில் சிவனோ டிருப்பரே.

311. அன்பே ஆரமுதே ஆனந்த வாருதி
என்பே உருகி இளைக்கு தையா
உன்போ லுறுதுணை இல்லை ஐயா
என்போ லன்பரை ஆளுமே சிவம்.

312. சித்தம் அந்தம் சித்தும் அந்தம்
சித்தம் நித்தம் மொத்தம் மாயில்
சித்தம் பித்தம் முற்றும் மாழச்
சித்தம் இல்லாச் சைவம் சிவமே.

313. சத்தம் அந்தம் சந்தம் அந்தம்
கத்தும் என்றோ கடலும் அந்தம்
பத்தும் பொருளும் பந்தம் அந்தம்
சுத்த சக்தி சைவம் சிவமே.

314. சத்தம் முற்றும் முழுதும் அந்தம்
மத்தம் மதியும் மகிழ்வும் அந்தம்
ஐந்தும் அஞ்சும் அறிவும் அந்தம்
அந்தோ! சைவம் அன்பு சிவமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

315. சைவம் என்பது பரிபூர ணத்துவம்
சைவம் என்பது வெறுவெளி காணும்
சைவம் என்பது சூன்யத்து சுகம்
சைவம் என்றும் சிவசம் பந்தமே.

316. சிவசம் பந்தமான செய்தி பேசில்
சிவசம் பந்தத்தில் சிவமே தலைவன்
சிவசம் பந்தத்தில் சிவமே ஒருவன்
சிவசம் பந்தத்தில் ஆன்மா பெண்ணே.

317. ஆன்மா பெண்மை யடைந்தாற் காணும்
தான்நா னென்ற தன்மையே போச்சு
ஆன்மா பிறப்பு இறப்பது தாண்டில்
ஆன்மா என்றும் தலைவனோ டாச்சு.

318. தலைவனைத் தேடல் தனித்துவ மாகும்
தலைவனைக் காணல் தந்திர மாகும்
தலைவனோடு பேசல் மந்திர மாகும்
தலைவனோ டூடல் யந்திர மாமே.

319. தலைவனொடு ஊடித் தலைவனை யுணர்ந்து
தலைவனொடு ஆடித் தத்துவ முணர்ந்து
தலைவனைப் பாடித் தாய்மை மலரத்
தலைவனோ டாகினார் தாண்டவ சொரூபிலே.

320. ஐயனே! அசலத்து அருளே! என்னுட்
பையவே புகுந்து பலபொரு ளானாய்
மெய்யது வாகியிங்கு மெய்யக மாகியாகி
வையகம் வந்தஎன் வள்ளலே விமலனாரே!

321. சிவமந் திரத்தில் கிரகஸ்த கூட்டம்
சிவமந் திரத்தில் வானப் பிரஸ்தர்
சிவமந் திரத்தில் சந்யாச கூட்டம்
சிவமந் திரமே சீவர் சொருபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

322. சிவமந் திரத்தில் பிரம்மச் சாரியம்
சிவமந் திரத்தில் பிரம்மோ பதேசம்
சிவமந் திரத்தில் பிரம்ம விஷ்ணு
சிவமந் திரமே பிரம்ம லோகம்.

323. சிவமந் திரமே முத்திக்கு வித்து
சிவமந் திரமே பத்திக்கு வித்து
சிவமந் திரமே சத்தியின் சொத்து
சிவமந் திரமே சிவனார் வீடாம்.

324. சிவமந் திரத்தில் சிவனார் நடனம்
சிவமந் திரத்தில் சிவனார் சொருபம்
சிவமந் திரத்தில் சிவனார் சக்தி
சிவமந் திரமே சிவனார் வீடாம்.

325. சிவமந் திரமே சத்தத்தி னுறைவிடம்
சிவமந் திரமே சித்த்து முடிவிடம்
சிவமந் திரமே சாந்தத்து சொருபம்
சிவமந் திரமே சித்தாந்த வீடாம்.

326. சிவமந் திரமே சீவற்கு வழியது
சிவமந் திரமே சீவற்கு ஒளியது
சிவமந் திரமே சீவற்கு அளியது
சிவமந் திரமே சீவரின் வெளியாம்.

327. சிவமந் திரத்தில் சிவசக்தி யுண்டு
சிவமந் திரத்தில் சிவகோயி லுண்டு
சிவமந் திரத்தில் சிவஜோதி உண்டு
சிவமந் திரத்தில் சிவசெய்தி யுண்டே.

328. சிவமந்திர மோதிற் சுமையது போமாம்
சிவமந்திர மோதிற் துன்பமது போமாம்
சிவமந்திர மோதிற் சீரொடு வாழ்வாம்
சிவமந்திர மோதிற் துரியநிலை யாமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


329. சிவமந்திர மென்றும் சித்தத்திற்கு விடுதலை
சிவமந்திர மென்றும் சுற்றத்திற்கு உறுதுணை
சிவமந்திர மென்றும் கொற்றத்திற்கு முளையது
சிவமந்திர மொன்றே நற்றவத்து நிலையாம்.

330. சிவமந்திரம் செய்தார் உமாஷங்க ரென்பர்
சிவமந்திரம் சரஸ்வதி சங்கர ரென்பர்
சிவமந்திரம் சொன்னார் சிஓம்ஷர் என்பர்
சிவமந்திர மோதில் சிவமாவர் மனையொடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பரமார்த்த உண்மை

★ இது அதுவல்ல அது இதுவல்ல
★ இதில் அதன் அம்சம் உண்டு.
★ இது அதைப் போலப் பாவனை செய்கின்றது.
★ இது அதனோடு ஐக்கியமாகின்றது.
தடை முற்றாக நீங்கும் பொழுது.

சுவாமி உமாஷங்கரானந்த சரஸ்வதி ஷிஓம்ஷர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*Printed by* :

SRI SAKTHI PRINTING INDUSTRIES

61 1/F, Peer Saibo Street,

Colombo-12.

Telephone : 438967

Publication & Copyright:

Mounashram Trust. Wellawatte, Colombo, Sri Lanka.

Publication No: 3 04 - 06 - 1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org